புதிய பாரதியின்

# நிலப் பூக்கள்

பாரதிவயல் வெளியீடு

2004

# நிலப்பூக்கள்
# (முதற்பத்து)

## ஆக்கியோன்: புதியபாரதி
## பாரதிவயல் வெளியீடு
## 2004

## பிரபா காலம்..

போர்இலக்கியத்திற்கும்,
போர்க்கால இலக்கியத்திற்கும்
இவன் ஒரு உலக வளாகம்.

போர் இலக்கியம்
நிலத்தில் பிறந்தது.
போர்க்கால இலக்கியம்
புலத்தில் பிறந்தது.
இவனுக்கு நிகராக எந்தத்
தமிழ்த் தலைவனும்
பாட்டுடைத் தலைவனாக
இருந்ததில்லை.

இவனுக்குப் புகழாரம்
சூட்டிய பாடல்கள்
பல ஆயிரங்கள்.
இசையும் கலையும்
எடுத்த பரிமாணம்
இவனைத் தலைவனாகக்
கொண்டதாலேயே
பரிணமித்திருக்கிறது.

சங்க காலத்திற்குப் பிறகு
பல்லாயிரம் பாடல்களில் இவன்
ஒருவனே பதிவாகி வருகிறான்.
என் இலக்கியத்திற்கும்
இவனே தகுதி தந்தான்.

மானத்தின் மீதும்,
மணி நிலத்தில் கருவான
தமிழன்னை மீதும்,
வானும் மறிகடலும்
வந்துதித்த தமிழர் படையின்
சேனைக்குள் உள்ளும்,
செந்தமிழின் கூன் நிமிர்த்திய
பிரபா என்னும்
பெருந்தலைவன் உருவாக்கிய
நிலக்காவியத்தில்
எங்கோ ஒரு துளியாக நான்.....

## என்னுரை...

அல்லற்பட்டு ஆற்றாது அழுது அழுது
வல்லதாய் எழுந்தோம்! வள்ளுவம் இப்படை

வள்ளுவம் தமிழ்ப்படை என்பது மட்டுமல்ல
என் வரலாறும் எழுத்துக்களும் தான்!

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ
செல்வத்தைத் தேய்க்கும் படை.

ஐம்பத்தியெட்டு அலற வைத்த கண்ணீரை
கும்பத்தில் ஏற்றியது இக் குறள்.

தெய்வத்தால் ஆகாது எனினும் நாம்
கைவைத்தால் ஆகுமென்று காட்டியது வரலாறு.

சிங்கள இனத்தில் ஒரு சமான்யனிடம்
இருக்கின்ற சிநேக பாவம்
அரசியல் மட்டில் இருப்பதில்லை.
போர் எழுந்து இலட்சம் உயிர்களைப்
பறித்தபோதும், இன்னும் திருந்தாத
செம்மல்கள் கொழும்பைப் புரட்டுகிறார்கள்.

சமாதானமாய் இருக்கவிடு என்ற
செல்வாவின் வேள்வியிலே உதித்தவர் பிரபாகரன்.

மனித மனங்களைச் சுத்திசெய்த தலைவன்
என்று சிங்களப் புத்திஜீவிகள்
விதந்துரைக்கும் ரணில் என்ற
புதிய சரித்திரம், உலகத்தால் அலசப்படுகிறது.

ஐம்பத்தியெட்டில் இருந்து
ஐம்பது ஆண்டுகால கலவரங்களை
அரக்கமாகவே சரித்திரம் கருதுகிறது.

ஒரு தேசியத் தேச இனத்தைப்
போரா சமாதானமா? கேட்பதற்கு
சிங்களத் தீவிரவாதம் துணிந்தபோதுதான்
தமிழரின் ஆயுதக் கவசம் அதிகமாகிக் கொண்டது.

இப்பொழுது,
அழுத நாட்கள் இறந்துகிடக்கக்
காணப்படுகின்றன.

சிரித்தபோது வந்தவைகளை எல்லாம்
ஒருசேரத் தொலைத்துவிட்டேன்.

அன்பார்ந்த தமிழுலகே,
காலம் கடந்து என் ஞானம்
உங்களை அடைகிறது.

நிலப்பூக்கள் உருவாக உழைத்த- உரமாக நின்ற
அனைவருக்குமான
நன்றிகளோடு,

-புதியபாரதி

(01)

# தமிழீழம்

தமிழே ஈழத் தாயகமே-எங்கள்
தாயே தமிழ்நிலமே
அமிழ்தே இனிதே ஆருயிரே-உனை
ஆரா தித்தோமே! -தமிழ் ஈழ

வேங்கைகள் விதை யாக்கிய-நில
வேரே விருட்சகமே- உயிர்
தாங்கிடும் நெஞ்சக் கோவிலே-எம்
தாயே தமிழமுதே! -தமிழ் ஈழ

உன்பாதங்கள் துதி ஆக்கினோம்-உயிர்
உமதே நாமானோம்
மன் பூமியின் புதுத்தேசமே- உன்
மனமே வசமானோம்! -தமிழ் ஈழ

குருதியின் புயல் வார்ப்பிலே- எம்
கொற்றம் ஆனவளே

பரிதியாய் உயர் மானுடம் -பார்
பதித்த தேனவளே! -தமிழ் ஈழ

தேவே தேவநற் திருவே- விடியலின்
தேசம் வாழியவே!
பாவே பாயிரத் தமிழே -இயலிசைப்
பண்பே வாழியவே! -தமிழ் ஈழ

பிர பாகரம் பிர வாகமாய்-உரம்
பெற்ற பெருங்குவையே
சிரம் தாளிட உன் பாதங்கள்-துதி
செய்தோம் திருநிதியே! -தமிழ் ஈழத்

## 2-தமிழே வாராய்

தாயே தமிழே தண்ணளியே ஆரமுதே
வாய்மைக் கனியமுதாய் வாய்த்த திருமுகமே
வாழ்வுக்கும் தாழ்வுக்கும் வையப் பெருஞ்சாரல்
நீள்பட்டு யர்ந்த நிலக்காந்தட் சுவடுகளில்
பாழ்பட்டுப் போகாது பண்பட்டு இலக்கியங்கள்
சேரச் சிறந்தோங்கிச் சிறப்புற்றுக் காவியமாய்
வாழ்வுற்று நிற்கும் வரலாறே, வரலாற்றில்
தாழ்வுற்றுப் போகாத தாரணியின் இலக்கியமே
உயிரில் உயில்எழுதும் ஈழத்து மறவர்களின்
பயிரில் விளைமுற்றம் பார்க்கின்ற நாயகியே
நெஞ்சம் மருவகலா நீதித்தாய் ஆனவளே
அஞ்சாப் புலிகளுக்கு ஆகுதியாய் வேதமிட்டு
போராயெழுந்த போர்முகத்து இனப் பேயை
நீராய் உருக்கும் நெருப்புத் தலைவனையே
பிரபா கரமாகப் பிரவாகம் செய்தவளே
உரவேக நெஞ்சை உரமூட்டிக் கொடுத்தவளே
சின்ன வயதிருந்து சேவித்த தாயெனக்கு
அன்னப் பொழுதுமுதல் அளித்த தமிழணங்கே
ஊனைப் பிழிந்து உதிரத்தே நெய்யாகி
வானக் கவிபுனைய வாய்திறந்த மென்மகளே
ஊரை உறவை ஊர்ந்த வயல்வெளியை
நாரை பறந்ததுபோல் நான்பறந்த காரணத்தால்
துருவத்துக் கடலில் செல்வக் கனடாவில்
உருவம் வாழ்வதுவும் உள்ளம் தாய்நிலத்தை
காதல் வயமாகிக் கண்ணயர மறுப்பதுவும்
சீதக் குளிர்தென்றல் நெருப்பாய் சுடுவதையும்
பாடி என்தேசத்தைப் பாட்டில் எடுத்துவர
ஏடி தமிழே இருந்தமிழே எனக்கருள்வாய்!
வாராய் என்னுளத்தே வடிவுக் கரசியடி
தாராய் என் இதயம் தாங்கும் தமிழவளே!
மஞ்சள் நிலவும் மருட்காந்தட் பொன்நிலமும்
கொஞ்சிக் குலவ கொடிகட்டி நிலமடந்தை
தஞ்சத்தில் விழுந்த தளிரும் செந்நெல்லும்
விஞ்சப் பசுமைநிலம் வேரிட்ட வாழ்வியலில்
சிட்டுப் பறந்ததுபோல் சேயிழையார் நடைபயில
பட்டு மயல்கொடுக்கும் பாதைக்குள் மச்சானை
விட்டு விலகி வேலிக்குள் நிலவெறிக்கும்
மொட்டுக்கள் பூத்த மெய்நாடு போயகல
வந்தான் பகைவன் வரலாற்றை ஏமாற்றி
சொந்தக் குடிநிலத்தை சிங்களமாய் ஆக்கியவன்
வெந்து உயிர்கருக விளைநிலங்கள் நெருப்பாக
குண்டுகளைப் போட்டுநிலம் கொழுத்தும் பேயாக
இன்றைக்கு வந்ததடி இனவாதப் பூதங்கள்
நண்டும் படம்கீறும் நமதுகடற் கரையேறி
மொய்த்தான் பகைவன் மோகநிலம் அழிந்ததுவே
பெண்டுகள் பிள்ளை பெருவயதுத் தாத்தாவை
அண்டி அயல்நிலங்கள் அஞ்ச எறிகணைகள்
ஆட்டுக் கழிவுகள்போல் ஆகாயம் ஏவிவிழ
ஓடிஉயிர் கருகும் உருக்குலைய என்தேசம்
வாடிப் பதறும் வாஞ்சைநிலம் போரெறிய
நான்படிக்கா விட்டால் நன்றி மறந்தவனாய்
உண்டு உறங்க ஊரைவிட்டு ஓடியவன்
என்றே வசைவாழ என்தமிழுக் கிழுக்காவேன்
என்தமிழர் எல்லாம் இருப்புக் குயிர்துறக்கும்
துன்பத்தில் நானிங்கே துடித்தேன்டி தாயவளே

ஊன்கருக உயிர்கருக உன்பிள்ளை விழிசோர
தான்கருகி ஆறாகத் தனியாய் வாடுகிறேன்!
வான்கலந்த துயரத்தால் வாஞ்சை நிலம்நோக்கி
சென்று துயர்தழுவிச் சேதிசொல்ல வாராய்நீ
எந்தன் உயிரே உயிர்கலந்த மென்காதற்
சிந்தா மணியே செந்தமிழே வாருமம்மா!
வேரெறிந்த என்நிலத்து வேதனையைச் சொல்லவிடு!
சீரெறிந்த செப்புகவிச் சிந்தனைக்குள் வந்துவிடு!

நிலமகள் காவியத்தின் தொடராக வரும்
நிலப்பூக்கள் என்ற புத்தகத்தின்
பாடல்கள் இன்னும் தொடரும்..

## 3-தமிழீழ வஞ்சிக்கொடியே!

வைகறைக் கதிர்முற்ற வாசலிற் கோலங்கள்
வரைகின்ற வண்ண மாதர்
வருகின்ற தேவநற் மணியிசைப் போதிலே
மலர்கின்ற பூவின் ஓசை
மெய்யறத் துயிலெழும் மெல்லியர் தண்புனல்
மேனிநீ ராடு துறைகள்
மேவுபட் டாடையில் வாரிடும் நீரிலே
மிதக்கின்ற தேவ சிலைகள்
கைகளில் சந்நிதித் தையலர் தாங்கிய
கயல்விழி யார் வலங்கள்
கந்தனின் சந்நிதி மங்கையர் குங்குமம்
கனல்கின்ற தீப ரதங்கள்
தைவரப் பாடுமோர் தாதையர் கற்பிலே
தருமெங்கள் கூடற் பதியே
தாதையங் குரலிலே கோதையர் ஆடிடும்
தமிழீழ வஞ்சிக் கொடியே!

காற்றோடு மழையும்வான் இடியோடு மின்னலும்
கதிரோடும் நீச்சல் பட்டு
கனலோடும் புனலோடும் கடுங்கோடை தனிவெட்பக்
கடுமையும் இசைவு பட்டு
சோற்றுக்கும் உணவுக்கும் செல்வத்து மகிமைக்கும்
சிரசாக நின்ற மாந்தர்
சேயிழை வயல்கண்டு சிந்திடும் இசைமொண்டு
செய்பயிர் கண்ட மாந்தர்
நேற்றைக்கும் நேற்றைக்கு முன்னூழி ஆண்டுகள்
நிலமாடும் உழவர் கைகள்
நின்றலர் பொன்நிதி குன்றிலா நாட்டிலென்
நிகரிலா வச மாகுமே!
மாற்றுப்பொன் மண்ணிலே மருவுற்றுக் கவிபாட
வந்தாடு காதற் பதியே
மகரந்தப் பொடிசிந்தி மடிசிந்தி எழிலாடும்
தமிழீழ வஞ்கிக் கொடியே!

அலையோடு கடலாடத் தரையோடு அவைமோத
அவிழ்கின்ற வாடை பட்டு
அசைகின்ற செந்நெலும் தளிர்கொண்ட அடவியும்
அல்லிமந் தாரை, கமலம்
இலையோடு பூக்களும் எறிகின்ற காலையிற்
இதமாகும் தேச வார்ப்பு
இரைகின்ற வண்டினம் இசையிடும் பறவைகள்
இவையோடு இன்னு மாங்கே
மலையோடு குறிஞ்சியும் கடலோடு நெய்தலும்
மருதமார் முல்லை பாலை
மரகத மேனியில் மயிலாடும் பாறையில்
குயில்பாடும் காடு சோலை
வலையாடும் மீனிலும் கடலாடும் முத்திலும்
வணிகமிட் டழைத்த நாடே
வந்தாடும் தமிழிலே நின்றாடும் சொர்ணமே
தமிழீழ வஞ்சிக் கொடியே!

கிழக்கிலே கோணேசம், மேற்கிலே கேதீசம்
இடையிலே முன் னேஸ்வரம்
யாழ்நகர் நல்லையும் மாமாங்கப் பிள்ளையும்
யாகநெய்த் தெய்வ வீடு

தொழத்தொழ வரமிடும் நயினையம் பதியிலும்
மாவிட்ட கீரி மலையும்
தேசத்தில் கண்ணகிக் காலயம் அமைத்திட
திருவிதம் கண்ட நாடே
பழத்தொடு பாலுமாய் பளபளக் காவடி
பாட்டொடு தேவ பதியும்
பங்குக்கு மடுவிலே மேரியும் நாடெலாம்
யேசுவும் பள்ளி மிசனும்

அழைப்பிலே யோகரும் ஆத்மிக அடிகளும்
அசைகின்ற தெய்வ வீடே
ஆடிப்பொன் ஊஞ்சலில் கோடிப்பொன் மோதிடும்
தமிழீழ வஞ்சிக் கொடியே!

நின்னையான் நினைக்கின்ற போதிலே வேறெதும்
நினைவுக்குள் வீழ்வ தில்லை
நெஞ்சத்துக் கோவிலே நீயெந்த நாளிலும்
என்தமிழ் வாழும் எல்லை
உன்னையான் பிரியினும் என்னுயிர் அவ்விடம்
இருப்பதே இன்று உண்மை
இதமில்லைப் பதமில்லை எதனிலும் மோகித்து
இங்குநான் வாழ வில்லை
சொன்னபொய் ஒன்றில்லை தேசத்து வாசலின்
திசையிலே பார்வை வைத்தேன்
துயிலிடும் போதிலும் துஞ்சாத தேசத்தைத்
திருவீழி மீது கண்டேன்!
அன்னையென் தமிழிலே மின்னிடும் அமுதமே
அருங்கவிக் கிதைய நாடே
அணிமலர்க் காவிலே அணிலொடு யானைவாழ்
தமிழீழ வஞ்சிக் கொடியே!

## 4-அவனும் அவளும்

**அவன்:**
அத்தை மகளே சித்தாரக் குயிலே
ஆசை அழைக்குது வாடி-என்
மீசை கறுக்குது தேடி-அடி
முத்தாரும் அழகே முகிலாரும் குழலே
முத்தாட வருவாயா-என்
சொத்தாக நிமிர்வாயா!

**அவள்:**
கொஞ்சம் பொறு மச்சான்
நெஞ்சம் நெகிழ் அத்தான்
துன்பப்படுகை எம் மண்ணில் -அகதி
மன்புப் பதைகள் எம் கண்ணில்-நாம்
கொஞ்சிக் குலவலாம் மஞ்சம் போடலாம்-கொண்ட
மண்துயர் வெல்வோம்-எரி
குண்டின் படுநிலம் காப்போம்!

**அவன்:**
உச்சிப் பனையிலும் அச்சம் இன்றியே‘‘
காகம் கூடுதடி கணக்கு-என்
தேகம் வாடுதடி சிலுக்கு-இந்த
மச்சான் இருக்கையில் மாறாப் பெதற்கடி
அச்சம் தவிர்த்து வாடி-என்
இச்சைக் கினிய தோடி!

**அவள்:**
மண்ணைப்பாரடா விண்ணைப் பாரடா
குண்டில் எழுகுது நெருப்பு-புகை
மண்டிக் கருகுது உயிர்ப்பு-நாம்
இன்றும் வாழலாம் நாளை வாழலாம்
இன்று தேவை மண்மீட்பு-எங்கள்
எழுச்சிதான் உயிர் காப்பு!

**அவன்:**
ஆசைக் கிளியடி மோசம் தவிரடி
பேசும் இனியது வாழ்வாம்-நாம்
காலம் கடப்பது பாழாம்-இந்தத்
தேசப் போரிலே நாமும் மடிவதோ
வாசப் பொதிகைநாம் காண்போம்-கோடி

காசில் வசந்தங்கள் காண்போம்!

**அவள்:**
தாகம் தவிர்த்திடு மோசம் தவிர்த்திடு
தேசத் தலைவனைப் பாராய்-பிரபா
பாச மைந்தனாய் வாராய்-உயிர்
போகும் புதையலில் தேசம் அழிவதோ
வேகம் விடுதலை ஆக்கு-புது
விடியல் வேதமாம் நமக்கு!

**அவன்:**
கனடா போனஅந்தக் கந்தையா மகன்
கழுத்துச் சங்கிலி பாராய்-அவன்
அழகைப் பைங்கிளி ஓராய்-இதை
மனதில் வையடி மண்ணேன் நமக்கடி
நாடு மாறலாம் வாடி-பொருள்
தேடி மகிழலாம் கூடி!

அவள்:
காடும் இருக்கடா கனனி இருக்கடா
கண்ணில் தெரியுது வானம்-கார்
மண்ணில் குவிந்திடும் மானம்-எங்கள்
வீடும் வயல்களும் வாழை தோட்டமும்
விளையும் நெல்லிடும் கஞ்சி-குரக்கன்
சாமி வரகிடும் விஞ்சி!

**அவன்:**
தேவியுனை நெஞ்சத் தாழம் விடியலின்
யாகம் புரிவது தெரியும்-மக்கள்
சோகம் உன்விழி விரியும்-உன்
ஆவி மகிழிடும் தேச சுதந்திரம்
காலத் தலைவனே தருவான்-பிரபா
ஞாலத் தமிழீழம் தருவான்!

**அவள்:**
பாச மைந்தரில் தேசம் செய்தவன்
தேசத் தலைவனாம் பிரபா-அவன்
பேசப் புலிவரும் உரமாய்-அந்த
வேங்கை பிறந்துமண் தாங்கும் புயத்திலே
வீர காவியம் சமைப்போம்-தமிழ்
ஈழ விடியலில் நினைப்போம்!

**இருவரும்:**
கஞ்சிக் கலயத்தில் அஞ்சி நடக்கிற
வஞ்சி வலயம் எங்கள் வயலே-இதை
மிஞ்சும் பூமி எங்கும் இலையே-நாம்
பஞ்சாய்ப் பறப்பதோ நெஞ்சம் இழப்பதோ?
மஞ்சள் குளித்துவரும் ஆறு-எங்கும்
மஞ்சம் போடும் எங்கள் ஊரு!

ஆச்சி எழுகையில் அப்பு நிமிர்கையில்
வீச்சில் கிடந்ததோர் மண்ணில்-அவர்
மூச்சுப் படர்ந்தளம் விசும்பில்-நாம்
பேச்சில்லாமலே பிரியத் துணிவதோ?
பெற்ற தாய்நிலம் காப்போம்-எம்
கற்பின் இறைநிலம் மீட்போம்!

## 5-சந்தமாய் என்புவி ஆக்கேனோ?

நெஞ்சத் தாமரை அஞ்சுகமாய் ஒரு
கொஞ்சும் தமிழ் இசை தாராயோ-அம்ம
கொஞ்சும் தமிழ் இசை தாராயோ!-எழில்
மஞ்ஞையென நடம் மனதுக் கருக்கலில்
மருவும் பரதமாய் வாராயோ-அம்ம
மருவும் பரதமாய் வாராயோ!

மன்பதை ஏட்டிலே வேரின் ஊற்றிலே
துன்பமே வசமிடல் ஆனேன்-அம்ம
துன்பமே வசமிடல் ஆனேன்-எந்தன்
அன்பு நிலத்திலே அன்னை புலத்திலே

அகமிட வந்துநீ சேராய் -தமிழே
அகமிட வந்துநீ சேராய் !

என்பும் உருகிட என்நிலம் வாரிட
இதயம் கருகல் உற்றேன்-அம்ம
இதயம் கருகல் உற்றேன்-உன்னை
சென்னியில் வைத்தடி சேவிப்ப தால்மட்டும்
சிந்தை மருவல் கண்டேன்-அடியே
சிந்தை மருவல் கண்டேன்!

வீணை எடுத்துவா கானம் இசைத்துவா
வேதனை நான் மறப்பேன்-அடியே
வேதனை நான் மறப்பேன்-எந்தன்
மானநெடும் புகல் மன்றில் நீவர
மண்ணின் இசை வடிப்பேன்-பெற்ற
மண்ணின் இசை வடிப்பேன்!

பாரதியாய் இந்தப் பாரில் நானொரு
பாட்டை எழுதிட மாட்டேனா-அடி
பாட்டை எழுதிட மாட்டேனா-எந்தன்
சாரதியாய் அன்னை சாற்றும் பொழுதினில்
சந்தமாய் என் புவி ஆக்கேனோ-இதயச்
சந்தமாய் என் புவி ஆக்கேனோ?

## 6-இன்று அவன் நாளையிந்த ஏந்திளையாள்!

குயில்கூவத் திசையார்க்கும் கோலநிலமயிற்பெடைகள்
மயல்மேவ ஆடிவரும், மண்ணார்ந்த குளிர்முகத்தில்
முயலோடித் தாவிவரும், மொய்பவள மைனாக்கள்
பயில்நடையில் பசிதீர்க்கும், பாதப் பெருங்களிறு
புயலெறியு மாப்பிளிறல் பெருங்கா டெகிறிவரும்
பெரும்பன்றி பாய்ந்தோடும் பெட்புநிலச் செறிதருக்கள்
அயல்முழுக்க நெல்வயல்கள், அழகுதரும் திருமேனி
ஒதியமலை என்றேயாம் ஊருண்டு கேளுங்கள்..

நொருங்கி மரம்முறியக் குரங்கோடும், கோட்டான்கள்
வெருண்டோடக் கூச்சலிடும் விளைநிலங்கள் பார்த்து
குறுங்கிழவன் வருவான், கொள்கிழத்தி அருகோடு
எருதுகள் மனையேகும் இன்பப் பொழுதுவரும்
பெருங்குளத்து நீரோடி பிடித்த நிலம் பாய்ந்து
மருங்கெல்லாம் பசுமை, மலையாய் நெல்குவிக்கும்
ஒதியமலை என்றேதான் உவந்த பெருநிலத்தில்
உதித்ததொரு சேதியினை ஒப்பாக்கி வைத்திடுவேன்!

மரங்கள் ஊடறுக்கும் மணற்தெருவில் கால்வைத்து
உரங்கொண்டு நடந்தேன் ஊறணியின் சாலையிலே
திருப்பம் ஒன்றுஅது, தென்மேற்குக் கரையேறி
கருப்பம் தரித்ததுபோல் கண்டேன் ஒருகுன்றம்
நெருப்புக் குழைத்ததுபோல் நெடுவானச் சூரியனார்
இருப்புக்குள் துளைத்து எழிலாய் பாய்ந்துவரும்
சிறப்புற்ற மாலையது செல்லும் திசைகுன்றம்
இருக்கின்ற பக்கத்தே என்பார்வை விழுகிறது.

குன்றின் வழியேறிக் கொள்வதற்குச் சிறுபாதை
மன்றில் ஏறி மருங்கெல்லாம் பார்வைவைத்தேன்
தென்றல் சுமந்துவரும் சிறுகூடற் செறிசோலை
ஒன்றில் இருந்து உலவுசத்தம் வருகிறது
அன்றில்போல் ஒருத்தி அழகுதமிழ்ப் பொற்பாவை
குந்தி இருந்தாள் கோமகன்போல் ஓர்இளைஞன்
நின்று இருந்தான் நேரிழையாள் முகம்திருத்தி
அன்பே என்று அழகுதமிழ் பேசலுற்றான்.
ஏடி.....வஞ்சி என்னுரைதான் :கேட்பாய்நீ
ஆடை புனைந்த அழகுமணிப் பெட்டகமே
கூடி நாமோர் கொள்கைக்காய் இணைந்தவர்கள்
நாடிப்போர் செய்து நாடுவரும் விடுதலைக்காய்
பாடிப் பரவும் படைகள் நாம்சமைத்தோம்
தேடிவருமாணை தேசியத்துப் பெரும் தலைவன்
நாளை அழைப்பான் நாடெடுக்கும் கரும்புலியாய்
வேளை வருமடியோ....வேங்கைமங்கை நீயறிவாய்...

இதுகேட்டு மங்கை எழுந்தாள் அவன்தாளில்

பதுமைபோல் நின்றாள் பளிங்குக் கண்மணிகள்
எதுகேட்டு நின்றனவோ ஏறிட்டுப் பார்த்தாள்காண்
வதுவைக்கா மங்கை மலர்வளையம் போடுகிறாள்
எதுவென்றே அடுக்கா இளவேங்கை வாட்புயத்தில்
மதுமங்கை போல்விழுந்தாள் மானப்படைத் தலைவன்
பதிவைக்கு மாற்போல் பாவைமனம் தேடுகிறான்
கொதிவைக்கும் மலர்மேனி கூடலிட்டுப்பார்க்கின்றான்!

மொட்டு மலர்மேனி முடங்கிப் புற்தரையில்
கட்டில் அமைத்துக் காரிகையாள் ஈதுசொல்வாள்
" எட்டுத் திக்கதிரும் இன்னுமொரு கரும்புலியாய்
பட்டுஉன துடலைப் பார்வைப்பீர் ஆயினும்கேள்
எட்டுப்பிறவி எடுத்தாலும் இப் பொழுதில்
தொட்டுச் சுமந்த திருவுடலைச் சுமப்பேன்யான்
கொட்டும் முழவொலியில் குதித்து உயிர்வெடியாய்
எட்டும் மறவனே என்னுயிரில் நீயிருப்பாய்....."

என்றாள் மங்கை இளம்புலியான் ஈதுசொல்வான்
" வென்றுவரும் வேங்கை வீழ்வதில்லை என்னுயிரே
இன்று உனைப்பிரிவேன் நாளை வெடியாவேன்...
கொன்று குவிக்கும் கொடியதொரு எதிரி முகாம்
வெந்து பிடிசாம்பல் வெளியாகிப் போயிருக்கும்
..........ஒன்றுகேள் எந்தன் உள்ளத் திருமகளே...
இன்றிந்தப் புனித எம்மண்ணில் புரட்டெழுந்தோம்
என்றும் உயிர்பிரியாத் தமிழீழத் தாய்மடியில்
தந்து சுதந்திரத்தின் தானைசெய்வாய்
என்னவளே........"
என்றான் வேங்கை இளையமகள் முகமலர்ந்து
"இந்த யுகப்பொழுதில் இணைந்த நமதுயிர்கள்
எந்தயுகம் மீதும் இணைபிரியப் போவதில்லை
வெல்வோம் தாயகமே வீரமிகு வேங்கைகளாய்
செல்வோம் புனிதப் போருக்கே" எனவுரைக்க
வானலையில் அழைப்பு வந்ததுதான் வேங்கை
தானெழுந்தான் தூரத்தே குண்டு வெடியோசை
கூட்டமாய் சிதற பெரும்தலைவன் கூப்பிட்டான்
வேங்கைத் திருமகளை வீரமைந்தன் கையணைக்க
தாங்கிக் கிடந்த தமிழ்மாது கைப்பிளந்தாள்
பொங்கிப் பாயும் புதுஇரத்தம் கையெடுத்து
வேங்கைமகன் நுதல்பற்றி வீரத் திலகமிட்டாள்
தாங்கிக் கரும்புலியான் தமிழ்ப்புரவி பறந்ததம்மா!
இன்று அவன் நாளையிந்த ஏந்திளையாள்!

## 7-நிலப்பூக்கள்

மரணங்கள் வருவ தில்லை-தன்
மானங்கள் சாவதில்லை
கரணங்கள் நிசங்கள் இல்லை-நிலக்
காவல் மனதின் எல்லை!

கடல்நீர் தனிலும் நெருப்பிடுவோம்-கடும்
தணலில்கூட பூ வளர்ப்போம்
பொடியாய் ஆக விரதம்வரும்-அதில்
புதியசுவடு உதயம் தரும்!

காற்றும் நாளை நாள்குறிக்கும்-எம்
கரைந்த வேர்வை தோள்கொடுக்கும்
நேற்றுக் குருதி இன்று சுருதி-நாம்
நிலத்துவார்ப்பு இதுஉறுதி!

இரவுகள் எமக்கு ஒளிப்பூக்கள்-இமை
வெட்டா திருக்கும் விழிப்பூக்கள்
வரும்பகை பார்க்கும் போர்ப்பூக்கள்-உடல்
மரிப்பில் மலரும் நிலப்பூக்கள்!

சுவடுகள் எல்லாம் விதையாகும்-கால்
படுமிட மெல்லாம் புலியாகும்
தவமிடும் தேசம் உருவாகும்-தமிழ்
ஈழ விடியல் உலகாளும்!

மரணங்கள் வருவ தில்லை-தன்
மானங்கள் சாவதில்லை
கரணங்கள் நிசங்கள் இல்லை-நிலக்
காவல் மட்டும் எல்லை!

## 8-பகைவன்கால் அடிமையான பதர்களை உமிழ்வாய் அன்றோ!

அடடாவோ அடடா அந்தோ
அடுக்கிடும் செயல்தான் ஈதோ
படர்நிலம் முழுதும் சிங்கர்
பட்டதோர் கால்கள் தோறும்
இடர்பட வெட்டித் துண்டாய்
இரத்தமாய் வெறியர் ஆடி
படைபடை ஆகப் போட்ட
பதைநிலம் வெடித்த தந்தோ!

கிரிஷாந்தி சிறிய பிஞ்சை
கீறியே புதைத்த செய்தி
அறியவே வந்த போது
அழுதுமே வற்றாக் கண்கள்
மறிதுயில் பூமி யெங்கும்
மக்களைக் குத்தி மாய்த்த
வெறியரின் கொடிய செய்தி
வெந்திட வருகு தந்தோ!

இராணுவ வெறியைத் தூவி
இரத்தத்தில் தூளை ஏற்றி
அராஜகப் பேயைப் போலே
ஆக்கிய கொலைஞர் கூட்டி
பராரியர் தமிழர் வஞ்சிப்
பள்ளியர் பிஞ்சு உள்ளச்
சிறாரெனப் பாராக் குள்ளர்
சிரசையே பிளந்து கொன்றார்!

எழுதடா எழுது இந்த
இரக்கமில் லாத சிங்கப்
பழுதுபட் டெழியர் கூட்டி
பண்டாதன் சந்திக்ரிகா
உழுதுவார் நிலத்தே எம்மை
உயிரொடு புதைத்தாள் அந்தோ
அழுகைதான் இனிமேல் அந்த
அரக்கர்க்கு குண்டே யாகும்!

அல்லல்பட் டழுதோம் சீவி
அரிந்திட இரத்தக் காட்டு
மல்லரின் கீழே பெண்கள்
மடிந்தனர் கற்பைக் கீறி
புல்லராய் பத்தாய்க் கூடி
பிறப்பிடும் உறுப்பைக் காமக்
கல்லராய் தின்றார் அந்தோ
கடவுளே நீதான் எங்கே?

ஆட்சிக்கு வருவார் தீர்வு
ஆக்கியே வருவார் சொன்ன
காட்சிக்கு அப்பால் ஆட்சி
கண்டதும் துண்டு துண்டாய்
பாட்டுக்குத் தமிழன் ஒடப்
படையையே ஏவிக் கொல்வார்
நீட்டுக்கு பண்டா தொட்ட
நீள்கதை மகளே தொட்டாள்!

பூமிக்குள் போட்ட நெல்லு
புதைபட்டுச் செத்தா போகும்
பூமிக்குள் புதைத்தால் சடலம்
புதையுண்டா போகும் கேளீர்
பூமிக்குள் இட்ட நூற்றார்
புதைகுழி வெடித்து வந்து
பூமியைக் கிளறக் கண்டோம்
புயலேசெம் மணிதான் பாராய்!

எழுதடா எழுது இந்தச்
சரித்திரம் எழுது எங்கள்
வழுதுபேர் நிலத்தில் கொடியர்
வந்தனர் வந்து இரத்தப்
புழுதியாய் மண்ணை வாரிப்
போட்டனர் கூத்து முற்றும்
முழுதுமாய்ப் பண்டா மகளே
மோகினிப் பிசாசு ஆனாள்!

தமிழரின் கொடியர் இந்தத்
தருக்கர்கள் இயக்கம் பல்லாய்
அமிழிடக் கையே ஏந்தி
அண்டியே ஏவல் செய்தார்.
உமிழெலாம் பதரே அன்றோ
ஊத்தையாய் சோற்றுக் காக
தமிழனே அரசில் வந்தார்
தமிழ்நில எதிரி ஆனார்!

எழுதடா எழுது தமிழர்
எழுச்சியில் எதிரி யாகி
எழுதினான் பாடி மேடை
இயம்பினான் எல்லாம் தமிழர்
பழுதினான் என்றே பாடாய்!
பகைவன்கால் அடிமை யான
கழுதையின் குரலைத் தமிழா
காறிநீ உமிழாய் அன்றோ!

## 9-முடிவினித் தேசம் புதிதே!

செம்மணி கண்டும் கூனிச்
சேவுகம் செய்யும் கோழை
அம்மணிச் சிரிப்பில் நெல்லு
ஆக்கிய பருப்பிற் காக
செம்மணி காணான் போரே
செய்யென வாக்கு இட்டு
தம்மணி கிலுக்கும் பேர்கள்
தமிழரோ தமிழா சொல்லு!

கொசோவா பார்க்கும் ஐயா
கொஞ்சம்வா ஈழம் செல்லு
பிசாசினைப் போலே கொன்ற
பீடுதன் ஆய்வு நல்காய்
மெலோசிவி ஆட்சி மேலாய்
மிலேச்சராய் வெட்டிச் சாய்க்கும்
கொலைமுகச் சிங்க மாந்தர்
கூட்டத்தின் சரிதம் காண்பாய்!

அரற்றுவார் அழுவார் கூவி
அடைக்கலம் கேட்பார் ஓலம்
உரத்துவான் கேட்கு தன்றோ
உயிர்கொளும் கொடியர் கூட்ட
மரத்துவான் செயலே கண்டேன்
மனிதமே இல்லை என்றோர்
பிறத்தியான் ஏட்டினா என்
பேசினான் அறிவீர் காண்க!

கொன்றிட வெட்டி வீழ்த்திக்
குற்றுயிர்ப் புதையல் வைத்து
நின்றுமே குரைக்கும் நீசர்
கூட்டத்தின் செயலோ பாரீர்

வென்றதாய் எண்ண வேண்டாம்
விடியலார் தேவி எங்கள்
முன்றலில் நிற்கக் கண்டோம்
முடிவுஎம் தேசம் அன்றோ !

## 10-கொடுமையால் எழுந்த விடியல

இந்தவோர் பொழுதும் நாளை
இயங்கிடும் உலகம் யாவும்

வந்ததாய் சுவடு காணும்
    வரலாற்றை எழுது வோரே
வெந்ததாய் உடலம் மீது
    வெறியரின் கொடுமை கண்டு
சிந்திய இரத்தம் கூடிச்
    சிவந்தது தேசம் என்பாய்!

மாமுகப் பிஞ்சு மேனி
    மலர்முக வஞ்சி கையில்
பாமுகம் விடியல் சொல்லப்
    பகர்ந்தது சுடுகண் என்றால்
காமுகச் சிங்கர் சேனை
    கடித்ததும் குதறித் துப்பி
கோமுகத் தமிழர் வாழ்வைக்
    குடித்ததே என்று சொல்வாய்!

## 11-சிந்திக்க வைத்தவன்

நேரிசை வெண்பா
கடவுள் வாழ்த்து

கொம்பை முறித்துக் குலமெழுத்துச் செய்தவனே
தெம்புமுயர் தந்து தேர்பவனே- தும்பிக்கைப்
பிள்ளையே எந்தன் தேச நிலப்பாவின்
வள்ளலாய் வந்துதமிழ் தா!

எந்தன் நாடும் என்னினிய செந்தமிழும்
சந்தமென என்னுயிரிற் சாறாகி- வந்தநெடும்
பாதை நிலச்சுவடுப் பாயிரத்தில் பிரபாவெம்
மேதையிவன் என்பதுவே மேல்!

கன்னித் தமிழாளை கனகத் திருமுலையை
சென்னி அரிந்த சிங்களத்தை- உன்னிமனம்
பார்த்து விழியருவி பதைத்ததொரு பிரசவமே
போர்க்கருவி யானமுனைப் போர்!

விடியற் தத்துவத்தில் வேதன் பிரபாதான்
வெடியில் உயிரை வேரிட்டான்- பொடியில்
பிடிசாம்ப ராக்கும் பெற்ற உயிர்வெடியின்
முடிவில் அழியும் முகாம்!

கரும்புலியாய் தேசக் காதல் சிறந்துவர
வரும்புலிகள் கூட்டம் வாராகும்- இரும்பொறையாய்
இருந்து தடம்பார்த்து எதிரி வரும்வழியில்
கரும்புலிகள் பாய்வரடா காண்!

தலைநகரம் இருந்துயர மலைநகரம் கண்டியென
அலையாடும் காவலூர் அம்பாறை- தலையாகி
எங்கும் பாய்ந்துவரும் ஈழத்துப் புலிகளென்ற
சங்கப் பலகையிது சார்!

சிங்களத்துப் பெருமக்கள் சேர்ந்துவர யாழ்ப்பாணம்
வங்கநிகர் கடலனைய வல்லையிலே- தங்கமென
பிரபாதான் பிறந்த பெருமகத்து நிலமண்ணை
கரமகத்துச் சென்றனரே காண்!

கண்ணில் ஒளிதவழும் கனியிதழில் சொல்வாழும்
எண்ணம் வரையிறங்கி எழுச்சிவரும்- வண்ணமென
விடியற் தத்துவத்தை வேரெறியும் ஒருதலைவன்
குவலயத்தில் வந்தபுலிக் கோ!

மானப் புலிக்குகையை மறவர் பெரும்படையை
தானமென ஏற்றதொரு தமிழீழம்- ஈனமென
மாற்றான் கைபடிந்து மருவிக் காட்டுநிலக்
கூற்றத்தை எதிர்த்ததுவே கொள்!

தாய்லாந்து வரையீறாய் தாரணிக்குள் இனத்தீர்வை
போய்நெஞ்ச மார்த்த புதுவெற்றி- காய்நகர்த்தி
போரா இல்லையென பேசுஎன்ற ஜேயார்க்குப்
போர்ப்பதிலில் வந்தவிடை போ!

கண்ணீர் புரையோடக் காலம் கரைந்தோட
செந்நீர் மலிந்து சிரசாட-தண்குவைநீர்
அற்றநிலம் கண்டு அறுநீர்ப் பறவைகள்போல்
பெற்றவே ரறுத்ததுவும் நாம்!

கூட்டுடைக்க மாட்டாமல் கூட்டுக் கரமிறுகி
பாட்டுடைத் தலைவனொடு பாராகி- நீட்டுமுனை
ஏவுகணை காட்டி ஏவிவிடும் கொடியருக்கு
ஏவுகணை காட்டியவன் ஏர்!

போரை அறிவான் போராளி தானறிவான்
வேரும் தமிழும் விதந்தறிவான்- வாருலகில்
வரலாற்றுப் போர்கள் வந்தமுனை யாரறிந்து
தருமாற்றல் இவனேபார் தனி!

காருண்யம் ஈரம், களமுனையில் புலிவீரர்
போருண்மை வழிபிசகா பெருவீரம்-சேருண்மை
வந்து இணைந்து வரலாற்றில் வேங்கையென
தந்துபடை யானவர்க்குத் தான்!

உலகம் முழுதுக்கும் உள்ளதமிழ் மாந்தர்க்கும்
அலகாய் வையமதை ஆர்வான்-புலங்களென
வந்துற்றோ மானாலும் வரவின் வேரூற்றை
சிந்திக்க வைத்தவனைச் சேர்!

## 12-கண்டேன் திருநாடு!

நிலமகளைக் கவிதைசெய்து
நெஞ்சத் திருத்திவைத்து
மழைமுகிலில் நீராடி
மணல்வயலில் சதிராடி
அலைபுரளக் கடல்மறித்து
அந்திமட்டும் சுழியோடி
வலைவிரித்துத் தமிழ்பாடி
வாழ்ந்தேன் ஒருகாலம்!

சித்திரை வசந்தங்கள்
செந்நெல் இமயமிடும்
பத்துநாட் பசுக்கன்று
பரதமிடும் வயல்வெளிகள்
மொத்திக் கள்வடியும்
மோகப்பனை சுரக்கும்
எத்திவரும் தளிரில்
எழில்மா முகம்சிரிக்கும்!

முக்கனிகள் தங்கும்
மொய்க்கும் கடைவீதி
எக்கனிகள் தான்எனினும்
இல்லம் நிறைமாதம்
தக்காளி வெண்டிகத்
தரிக்காய்கள் முளைக்கீரை
எக்காலம் இல்லை
எங்கள்தாய் பொன்பூமி!

நீரோடி நிலம்நெகிழும்
நிலம்பூத்து மரம்மகிழும்
வேரோடு பழுத்தபலா
விருந்துவரத் தேதிவைக்கும்
கூரோடு மாங்கனிகள்
குமரிவைக்கும் கொம்பரிலே
வாரோடுகின்ற கிளி
வள்ளிசெய்யும் சோலையடா!

கனிவாழை அணிவகுக்கும்
கடல்மீன்கள் தரையில்வரும்
மனைவாழும் பசுசிந்தும்
மடியின்பால் நிலம்நனைக்கும்
அணில்ஓடிக் காதல்செய்யும்
ஆலமரம் பழம்கொடுக்கும்
கணைபோடும் தென்னைமகள்

காய்எறியும் தாவணிக்குள்

தாமரை முகம்சுழிக்க
தாமரையாள் நீரெடுப்பாள்
கோமளத்தால் கூந்தலிலே
கோலமல்லி பூநிறையும்
மாமாங்கம் அபிடேகம்
மண்ணெடுக்கும் பாலாறு
நாமமரப் பாய்கொடுக்கும்
நம்தேசப் புல்லுமடா!

தீவகமும் தாவடியும்
தேசுதரும் புகையிலையாம்
நாவல் பளைதேசம்
நம்காடு பாலைப்பழம்
கூவில் பனங்கள்ளும்
கோண்டாவில் திராட்சையுமாய்
சேவிக்கச் செல்வமகள்
சிறப்பெடுத்த தென்நாடு

கட்டுக்கரைக் குளமும்
கனகத் திரணமடு
மட்டுநகர் வாவி
மன்னார் அம்பாறை
சொட்டும் நெய்யூற்றில்
சோறிட்ட வளநாடு
பட்டுக்கால் படரப்
பசுமைக் கொருகாலம்!

தாலாட்டுப் பாடிவரும்
தாய்முகத்தில் முகம்வைத்து
காலோடும் பாதைஎங்கும்
கண்டேன் திருநாடு!
நாளோடு விழாக்காணும்
நம்வாழ்வுப் பாதையிலே
வாளோடு இராணுவன்கள்
வந்ததினால் அழிந்ததடா!

இன்றுநில மகளால்
இருப்புக் குலைந்துபட்டு
தின்று தமிழ்நிலத்தை
தீயாலும் குண்டாலும்
கொன்று குவித்துவரும்
கூடாரம் உடைக்கவென
வென்றுவரும் புலியை
வீரத்தாய் மண்சுமந்தாள்!

மானத்தின் மீதும்
மணிவயிற்றிற் கருவாகி
ஈனத்தைச் சுமப்பதற்கு
எங்கள்மண் இனியில்லை
வானப்பசு முகட்டில்
வல்லூறு வந்தபின்பு
ஏணைக்குள் தாலாட்டும்
எழுச்சிப்பண் ஆச்சுதம்மா!

## 13-தாயே தாய்நிலமே!

தாயே தாய்நிலமே தங்கத் திருநாடே
தீயாய் எரியத் திருவுளமோ சொல்லடிநீ
வாய்மைக் கவிஞனுயிர் வாஞ்சைநிலம் மீதேறி
நோய்வைக்கும் பேய்கள் நூதனங்கள் பேசுதடி!
வீட்டுக்கொரு காம்பும் வேலிக்குள் சிப்பாயும்
காட்டிக் கொடுக்கவென காதுமட்டும் தலைமூடி
பாட்டுக்குத் தலையசைக்க பகைத்தமிழன் ஆகியவர்
சேட்டைக்கு இழுக்கச் சேயிழையாள் உடல்எரியும்
அமைதிப்படை காலம் ஆச்சுதடி மீண்டும்பர்
இயமப்படையோடு எறிகணைகள் வீழ்ந்தநிலம்
குஞ்சும் குருமானும் கொட்டுண்டு மண்கருகி
அஞ்சிப் பெயர்ந்தோட அலைகடல்கள் தரைமேவி
பெருவெள்ளம் பாய்ந்து பேரலைகள் ஆனதுபோல்
இலட்சக் கணக்கில் இருப்புக் குலைந்துபட்டு

கடலோடு கடந்து காணப் பெருநிலத்தை
படகோடு போனவரை பாவங்கள் பார்க்காமல்
விஷமாகப் பாய்ந்த விமானக் குண்டுகளால்
நிசமாகிப் போன நிலத்தெதிரி யான்பார்த்தேன்!

எங்கள் நிலத்துள் இருப்பை அழிப்பவர்கள்
எங்கள் இனத்தின் உரிமை மறுப்பவர்கள்
வெள்ளையர்கள் சுதந்திரத்தை வேராக்கிப்
போகையிலே
நல்லவர்கள் போல்நடித்து நமதுகதை முடித்தவர்கள்
இன்றும் உருக்குலைந்து இனவாதப் பேய்முகத்தில்
கொன்று குவித்துவரும் கொலைகாரர் ஆட்சியினை
நன்று எனப்பரவி நல்விளக்கம் சொல்வதற்கும்
சென்று வெளிநாட்டில் சிலம்பாடி நிற்பதற்கும்
எங்கள் தமிழர் இரண்டாகப் பிரிந்ததினால்
வங்கம்போல் எழுதும் வரலாற்றை நாம்இழந்தோம்
கூழுக்கும் இனம்விற்கும் கூட்டம் பிறந்ததம்மா

பாழும் சமுதாயப் பாவிகளாய் நிறம்மாறி
எதிரிக்கு எதிரி என்நண்பன் எனவகுத்து
சகுனம் கெடுகவென சளிமூக்கை அறுத்தவர்கள்
இனத்தைப் புதைத்து எழும்போரை நல்லதென
மனத்தைத் திறந்து மாய்மாலம் போடுகிறார்!

வானத்தை மண்ணை மறிகடலை அடர்காவைக்
கானத்தை அழிக்கும் கந்தகத்து எரிமுகத்தை
எதிர்க்கக் களமாகி ஏழெட்டாய்ப் பிறந்தவர்கள்
சதிர்க் கூட்டமாகி சாஷ்டாங்கம் போல்விழுந்து
எதிரிக்குத் துணையாக உட்பகையாய் உருமாறி
கதிராகும் அறுவடையைக் காணாமல் விடுதலையை
வென்றெடுக்க முன்னம் விஷக்கிருமி ஆகுவதோ?
இன்று நாட்போனால் எழுவதற்குக் காலமில்லை
என்று தெரிவாய் எம்மினத்துள் ஓர்கரத்தை
ஒன்றாக்கி வைத்து என்நிலமே முரசறைவாய்!

பகைக்குப் பகையாகி பழிக்குப் பழிமுடித்து
குளத்தைக் கலக்கி கோட்டானை வரவழைத்து
நகைப்புக் கிடமாக நாலைந்து குழுமுனையாய்
புகைக்காடாய் மண்சரியப் போகுதடி நிலமகளே!
வகைக்கு வகைதெரியா வரலாற்றுக் கறைபடிந்து
பகையை வரவேற்றுப் பதாதைகளைச் சுமப்பதுவோ?
இருப்பை எழுதிவிட எந்தத் தீர்வுமில்லை
கருப்பைக் குலைத்த கடும்பகையை யார்அறிவார்?
எதுக்கும் நாமெழுந்தோம் என்று கரம்தழுவிப்
புதுக்கி எழுந்து பொன்னாடே நீஎழுவாய்!

## 14-காதலர் பூமி

பட்டுப்பா வாடை மின்னும்
 பாதிமாத் தாவணியில்
சுட்டுவிழிப் பார்வை கொல்லும்
 தேசமடி என்தேசம்
மொட்டு முல்லைப் பூமுறுவல்
 மெல்லியர்கள் நிலவேரின்
தொட்டிலடி என்தேசத்
 தேவாரம் காதலம்மா!

முற்றைவெளி முருகநல்லூர்
 முழங்கிவரும் இரணைமடு
மெத்தெழிலை நான்சுமக்க
 மிதந்ததடி ராஜாங்கம்
கைப்பிறைக்குள் முழுநிலவு
 காண்பதெல்லாம் தேன்நிலவு
மெத்தைகளைப் போட்டதெல்லாம்
 என்தேசப் புற்றரைகள்!

வைகறையின் விழிகளிலே
 வாசல்நிற்கும் காதலனை
கைகளிலே போட்டுநிற்கக்
 கன்னிமனம் பாதைசெய்யும்
பொய்விழுந்த மானிடரின்

பேச்சிலெதிர் போடுமென்றால்
நெய்யெரியும் யாகமதில்
நீறாகும் பாவைநெஞ்சம்!

வாழைமரம் காதல்செய்யும்
வளர்தென்னை ஊடல்செய்யும்
தாழை மடல்வெடித்து
தண்காடும் போதைதரும்

ஆலம்குயில் கொடுக்கும்
அலங்காரக் காதல்வயத்
தேசப் பெருநிலமே
தேரோடும் காதலம்மா!

பட்டகட்டை யாய்மரணம்
பாடையிடும் போதுமந்த
தொட்டசுகம் சொல்லியழும்
தேசமடி என்தேசம்
கட்டிக் கரும்பானவளை
கட்டையிடும் போதுமவன்
வெட்டும்விழி நீரருவி
வேதமெனும் காதலம்மா!

காதலெழிற் பூமியெங்கும்
கற்புயர்தன் தேசமண்ணில்
நீதியறம் முடித்து
நீளரக்கம் வந்ததம்மா!
மோதி அழிப்பதொன்றே
முன்னெடுத்த சிங்களத்தில்
சோதனையில் தீக்குளிக்கும்
தேசமென்று காதல்செய்யும்!

## 15-ஒரு வேங்கையின் பரணி

காலைப் பொழுதாற்கக் கண்மணியாள் மனைமுற்றம்
பெருக்கித் துடைத்தாள் பெருவளவுச் சருகுகள்
ஒன்றும் விடாமல் எடுத்துமனை வாசலெல்லாம்
இன்று புதிதாய் எழிற்கோலம் போடுவித்தாள்!
சென்று படலைக்குள் சேர்ந்தாள் முன்தெருவில்
நின்று கிழக்கே நேரிட்டாள் ஆளரவம்
நிழல்கூட இல்லாமல் நின்று பதைபதைத்தாள்
அழுதுகொண்டே அமர்ந்தாள் கிழுவையிலே
ஓடிவந்தொரு காகம் உரையெடுக்க நம்பிக்கை
கூடிவரக் கண்டாள்: கிணற்றடியில் ஓடிப்போய்
அள்ளி நீராடினாள் ஆலயத்து மணியோசை
துள்ளியெழக் கண்டாள் தூயதோர் ஆடையிலே
கண்மணித்தாய் மலர்ந்து கடவுட் திருவுருவம்
முன்நிற்க வணங்கித் விழிமூடி ஒளிகாட்டித்
திரும்பினாள் திரும்பித் தீபச் சுடர்முன்னே
கரும்புபோல் ஓர்உருவம் கண்மணித்தாய் சிலிர்த்தாள்
தங்கமகன் வந்துநின்றான், தெய்வ விளக்கொளியில்
அங்கம் மினுங்க அழகுமகன் வந்தான்காண்!
கட்டினாள், தலைமோந்தாள் கனத்த வருடங்கள்
எட்டியிருந்த ஏகமகன் தனையணைத்தாள்
எப்படிநீ வந்தாய் என்மகனே உன்வரவில்
தெப்பம்போல் மிதந்தேன் திருமகனே இன்னும்நான்
விழித்தவிழி மூடவில்லை மெய்யுறக்கம் இல்லாமல்
வழிக்கு வழிபார்த்தேன், வாசலிலே பூசைவைத்தேன்
நேற்றுத்தான் நீவிட்ட நெடுங்கடிதம் என்கைக்கு
காற்றுப்போல் தந்துக் கடிதொருவன் மறைந்தான்காண்
அப்பா செல்விழுந்து அகன்றார் இன்றுவரை
எப்படிநான் வாழ்ந்திருப்பேன் என்றெண்ண மில்லாமல்
மூன்று வருடங்கள் மூதன்னை தனைமறந்தாய்
ஆன்றதுணை இன்றி ஆருமற்று யான்இருந்தேன்

என்றாலும் என்மகனே எமதுயிரின் நிலம்மேவி
சென்று படைகுவித்த செய்திவந்த தப்போது
வேங்கையாய் நிலத்தைத் தாங்கினாய் எனவுரைத்தார்
தாங்கினேன் உன்பிரிவைத் தானையிலே நீதலைவன்
என்றார் சோமண்ணை என்னிதயம் பூரித்தேன்
வென்று இளவேங்கை வீரத்தில் சேர்நிலங்கள்
தாய்மனத்தில் வளர்ந்ததினால் தங்கமகன் பிரிவில்

நோய்கொள்ளா திருந்தேன் நேற்று உன்கடிதம்
வாராய் எனச்சொல்லி வந்ததடா என்மகனே
தேராய் என்மனது திருவீதி வருகுதடா
காணாப் பொழுதும் கண்ணயர்ந்து பொழுதுஎலாம்
தேனாய் இனித்த திருமகனே நீயினிமேல்
உன்னினிய தாய்முகத்தில் உற்றதுணை யாயிருக்க
என்னிதயம் ஏங்குதடா இனியமகன் நீயிருப்பாய்...!
என்றாள் தாய்முகர்ந்து ஏகமகன் இருத்தி
நின்ற தாய்முகத்தில் நிலைத்த அவன்விழிகள்
அம்மா என்றுருக அன்புத்தாய் நிமிர்ந்தாள்...
சும்மாசொல் ஈதல்ல, நீயெங்கள் தேசத்தாய்
வென்றுவரும் வேங்கை வீழ்வதில்லை என்தாயே
இன்றுந்தன் மைந்தன் இணைந்தான் கரும்புலியாய்
என்றுரைத்தான் மைந்தன் ஈழத்தாய் கண்மலர்ந்தாள்
அன்புமகன் உனக்கு அதுதான் முடிவென்றால்
இன்பத்தாய் முடிவும் இதுதாண்டா என்மகனே......
என்றுரைத்தாள் தாயார் இளவேங்கை எழுதோளில்
வென்றுவரும் புயத்தின் வீரப்புயல் கண்டாள்!
எங்கள் நிலம்மேவும் இதயங்கள் ஒன்றாக
தங்கத் திருநாடு தானைசெய்ய எழுந்தனகாண்!
தாய்முகத்தில் முகம்பார்த்துத் தங்கமகன் மலர
சேய்முகத்தில் வாரெடுத்துச் சீரிட்டாள் பொன்தாயார்"
பாசத்தாய் மடியில் படைமறவன் தானிருக்க
தேசத் தலைவன் திருவழைப்பு வந்ததுகாண்
வந்ததுதான் வேங்கை வாஞ்சைத் தாய்முகத்தை
ஏந்தித் தனையன் இறுதிப்பொழுது கண்டான்!
....அம்மா இன்றுநான் நாளையினும் எத்தனைபேர்

இம்மாநிலத்தில் எங்கள்நிலம் செய்வோம் பார்
தானைத் தலைவன் தமிழ்மறவன் வைத்தபடை
மோனத் துயில்பரப்பி முட்ட உறங்காது
உயிர்எறிந்து வெடியாகும் உருவம் நாம்தாயே
பயிராய் விடுதலையின் பார்எறியும் தமிழ்ஈழம்
உன்னினிய மகனாங்கே உயிரோடி ருப்பான்பார்
என்னிதயத் தாயே.......என்று விடைபெற்றான்!
புழுதித் தரைகிளப்பி புயல்போல் பாய்ந்துசெலும்
வழுதிக்குத் தன்பார்வை வைத்தவிழி மலர்ந்து
இந்தத்தாய் இருந்தாள் இளம்புலியான் மறுநாளில்
வெந்து பிடிசாம்பர் வேளைவரும் என்றாலும்
தேசத்தில் உயிலை எழுதிவிட்ட திருமகனை
பாசத்தில் கொண்டாள் பற்றுமிக்க தமிழ்த்தாயே!

## 16-நோர்வே பாராய்!

சீர்கொண்ட பேர்வரிசைச் செம்மல் என்னும்
 செகமிட்ட நனிநாடு நோர்வே தன்னாய்
பேர்கொண்ட மனிதமனம் பேசும் மன்னாய்
 பீறிட்ட போர்தணித்துப் பேசித் தீர்வு
வார்இட்ட இனவாத இலங்கைமன்றில்
 வந்துதித்தாய் நாமின்று வாழ்த்துச்செய்தோம்
நீரிட்ட எமதுவிழி அரை நூற்றாண்டு
 நெடுங்கதைகள் போகாதோ நோர்வேகேளாய்!

வல்லரசுக் கோமான்கள் மேற்கேஆளாய்
 வந்துதித்து ஆயுதங்கள் பரிசேஆக்கி
கொல்லரக்கர் சிங்களத்துக் கொலைஞர்ஆட்சிக்
 கொடியருக்கு நெய்யூற்றி வாழ்த்துச்செய்தார்
சொல்வழங்கி எத்தனையோ ஒப்பந்தங்கள்
 சுயநலத்தால் கிழித்தெறிய சிங்கக்கூட்டம்
வெல்வதற்கே வழிவகுக்க வெள்ளையாட்சி
 வீணருக்கே உதவியதாய்ச் சரிதம் கண்டோம்!

சிங்களத்தை ஆட்சிமொழி ஆக்கிஇன்ப
 செகமழகு ஈழத்தை இரண்டாய்வைத்து
மங்களமாய் பண்டார போட்ட போடு
 மகுடமிட அரசியலில் கட்டில் போட்டான்
துங்கமணிப் பாராளும் மன்றில்நின்று
 தெருக்காடை காலிமுகத் திடலில்ஏவி
தங்கமணித் தமிழ்த்தலைவர் கூட்டம்நோக
 தடியடியில் குருதிவிழப் பார்த்தான்பண்டா!

சுதந்திரமாய் நாடிலங்கை பிறப்புக்காண
    தேர்ந்ததொரு தலைவனவன் இராமநாதன்
பதந்திருவில் மெய்யிட்டு பணிந்துபோற்றி
    பாதையிலே கம்பளமாய் குதிரையேற்றி

விதந்ததொரு வரவேற்புக் காயமுன்னே
    வெறித்தனமாய் இனவாதி ஆனான்சேனா
புதைந்ததையா தமிழ்நிலங்கள் சிங்கர்கூட்ட
    பெரும்படையாய் தமிழ்நிலத்தை பறிந்தார்அந்தோ!

கிறிஸ்தவத்துப் பரம்பரையான் பண்டாமாறி
    கிளர்ந்திட்டான் புத்தமத வாதியானான்
வெறித்தனத்தில் ஆட்சியினைக் கவரவென்றே
    வெளிக்கிட்டான் இருபதுவாம் மணிக்குஉள்ளே
பொறித்திடுவேன் சிங்களத்தை ஆளும்மொழியாய்
    புத்தமத மொழியதுவே என்றேயார்த்துப்
பறித்திட்ட ஆட்சியினைப் பெற்றான்ஆனால்
    படுகாவிப் பிக்குவினால் செத்தான் பண்டா!

சிங்களமே ஒருமொழியாய் ஆகக்கண்டால்
    சேர்ந்துவரும் தமிழர்களும் பிரிந்தேபோவார்
இங்குஇரு மொழியென்றால் இருக்கும்இலங்கை
    இல்லையெனில் நாடிலங்கை இரண்டேயாகும்
பொங்கிவரும் தமிழீழம் இதுவேஉண்மை
    பெரேரா இவ்வாறு உரைத்தாற்போலே
மங்களமாய் இருந்தநிலம் அன்றுதொட்டு
    மரணமதாய் ஆனதடா இலங்கைநாடு!

வீடுகடை கோடிநிலம் எல்லாம்போக
    வீதிகளில் தமிழச்சி மார்பரிந்தார்
ஓடிவிழுந் துடையின்றி நிர்வாணத்தின்மேல்
    உயிரோடக் கற்பழித்த காடைநாடாய்
பாடையிலும் தமிழாடும் பண்டைநாட்டை
    படுவெறியர் ஆக்கிவைத்தார் இரத்தநாற்றம்
ஓடைவெளி கடந்துலகம் உறையக்கண்டோம்
    உயிரினிமேல் வெல்லமில்லை என்றோம் நாமே!

நீதிநிலம் போற்றுமுயர் தமிழன்இனிமேல்
    நெடிதுயில முடியாது என்றபோதும்

பாதியிடம் தன்னிலுமே படுத்துறங்க
    பாராளும் மன்றினிலே சட்டம்செய்யக்
கூதியிடம் கற்புக்கோர் கருத்துக்கேட்ட
    கூட்டமாய் செல்வாதான் கேட்டார்ஆக
சாதியிலே கொலைஏவித் தமிழன்தலையை
    சாதனையாய்க் காட்டியர சாட்சிசெய்தார்!

பண்டாதான் செய்தபிழை திருத்தவென்றே
    பண்பார்ந்த செல்வாவின் பேச்சினோடு
துண்டாட இலங்கையிடக் கூடாதென்ற
    தேசநலம் வாய்ந்ததொரு ஒப்பந்தத்தை
திண்டாட ஆபத்தாய் வைதான்ஜேயார்
    திக்காடும் யாத்திரையாய் களனிசென்றான்
வண்டாடும் அழகுநிலம் வெந்துபோக
    வந்ததொரு போருக்கு வடிகால்செய்தான்!

இனவாதம் மொழிவாதம் இன்னுமாக
    நிலவாதம் செய்ததொரு காட்சியோடு
மனவேகம் கொண்டுதமிழ்க் கல்வியாற்றும்
    மாட்சியிலே கைவைத்தார் சிறிமாஆட்சி
கனவேகத் தரப்படுத்தல் என்னும்சட்டக்
    கடும்போக்கால் தமிழ்க்கல்வி அழித்தார்அன்றோ
இனவாத உச்சத்தை இந்தச்சட்டம்
    இயற்றியதால் தமிழிளைஞர் இயக்கம்கண்டார்!

ஐம்பத்தி யேழுஅதில் பண்டா-செல்வா
    அறுபத்தி யேழுஅதில் டட்லி-செல்வா
திம்புக்குள் இயங்கங்கள் சேர்ந்த பேச்சு
    திசைமாறிச் சந்திரிகா-புலிகள்பேச்சு
வம்பிட்ட ரஜீவ்வின் ஜேயார்பேச்சு
    வசமாக்கிக் கிழித்திட்ட காட்சிகண்டோம்
நம்பிக்கை கொண்டொருகால் உந்தன்மீது
    நாம்வந்தோம் இன்றுபுது சரிதம்கண்டோம்!

கார்வந்து நீராடக் கல்விமேவும்
கடுமுழைப்புத் தமிழ்வாழ்வைக் கரந்துஆட
கூர்வந்த ஈட்டிமுனைக் கொடியர்ஆட்சி
கொண்டதொரு போரரக்கம் எம்மைசூழ்ந்து
நீர்வந்து விழிமுட்டும் சோகவாழ்வை
நெடும்தமிழர் வாழ்வாடக் கண்டார்ஆயின்
போர்என்றால் போரென்று காதைசொன்ன
புத்தகமாய்ப் புலிவந்து சரிதம்கண்டார்!

நோர்வேயே நல்லதொரு உலகப்பண்பு
நேருருக்கள் கொண்டதினால் இன்றுஎங்கள்
போர்வந்த காரணிகள் சொன்னேன்கண்டீர்
பொல்லாத இனவாதம் செத்தேயாக
நீர்வந்து திரையாட நிற்கும்பூமி
நிலையிருத்திச் சமவாழ்வு செப்பும்காதை
தீர்வென்று வைத்துவிடத் திறமைகாண்பீர்
திருவிதுதான் விட்டகன்றால் நாடுஇரண்டே!

## 17-மனயாத்திரை !

மண்ணில் மீண்டும்
மலர்ந்தன பாதங்கள்
கண்களில் மீண்டும்
காவியப் பூமிகள்
நான் பிறந்தஊர்
நடந்த வயல்வெளிகள்
தேன்கதலித் தோப்பு
திருமுருகன் கோவில்
எல்லாமே நான்ஓடி
எழுந்த தேசங்கள்!

கல்வயல் பிள்ளையார்
கனகத்தாய் மடுமாதா
பள்ளிவாசற் கடற்கரை
பனைகளின் தோப்பு
எள்ளுசணல் வளர்ந்து
எழிற்காடாய் தரிசுகள்!

சொல்லாமல் போனதென்
தேசத்தில் மீண்டும்நான்!

நல்லதம்பி வாத்தியார்
நகுலக்கா வருகிறார்.
புல்லுமலை ஐயர்
பூப்பறித்துப் போகிறார்
துள்ளிவரும் ஆற்றில்
நீராடும் அரிவையர்கள்!
வில்லம்பு போற்பாய்ந்தேன்
விழுந்தெழுந்த தேசத்தில்!
எல்லாமே வருகிறது!
எப்பொழுது வந்தேன்யான்?

நல்லூர்வீதி நாச்சிமார்கோவில்
நாடுபுகழ் நூல்நிலையம்
புல்லுக்குளம் கோட்டை
புத்துயிராய்க் கிடக்கிறது

நேற்றெங்கொ இருந்ததுபோல்
நினைவில் ஒருதேக்கம்
காற்றுப்போல் பறக்கும்
கனடாதான் அதுவெனினும்
வார்ப்பில் உருகிவரும்
வளர்நெருப்புப் போல்வாழ்க்கை
தோற்றுப்போய் ஒருவாழ்வு
தேய்ந்த சில்லுகளாய்
இயந்திரப் பொழுதுகளாய்
இயன்ற ஒருவாழ்க்கை
துயிலே அரிதாக
துவளும் மனிதர்களாய்
மயலில் வளர்ந்துவரும்
மனிதக் சுமைமறந்து

அயலில் விழுந்தேனென்
அழைத்த மண்சுமந்தேன்!

மீசைசிவம் கையை
விசுக்கி நடக்கின்றார்
ஆசைக்கிளி மாங்கண்ணை
அருகில் வருகிறார்
வாசமல்லி நறுந்தாது
வழியெல்லாம் கமக்கிறது

தேசம் எனதாக நான்
திரும்பவும் தாய் மடியில்.......

தீர்த்தக்கேணி யதில்
நீராடிப் போந்திருந்தேன்
ஆர்க்கும் மறையோசை
அம்மன்தேர் வாசலிலே
வீற்றிருந்தே னப்பொழுது
விழுந்த ஓரடியில்
போர்த்திருந்த தூக்கம்போய்
பூப்பனியில் கண்விழித்தேன்!

நேற்றிருந்த கனடாவில்
இன்றும் நானிருந்தேன்
ஊற்றுப் பெருமண்ணில்
உறக்கத்தில் போய்வரினும்
நாற்றுக்கள் அங்கேதான்
நமக்குண்டு ஆனதினால்
கனவும் இனிப்பாகக்
கண்டேன் என்மண்ணை!

18-தாயின் தாலாட்டு
தாலாட்டுப் பாடவா! தாய்மண்ணை மீட்கவா!
தங்கமகன் நீயுறங்கத் தமிழ் எடுத்து ஊட்டவா!

காலளந்த முற்றத்தைக் காலிழந்து போகுதடா!
நாமிருந்த மண்ணைவிட்டு நமதுவண்டி ஏகுதடா!

அழுவதற்கு இல்லையடா அன்புமகன் நீயுறங்கு!
எழுகின்ற தேசத்தில் இல்லைத்துன்பம் நீயுறங்கு!

பொழுதுபடப் போவதில்லை உதயத்தின் பாதையில்
பூத்தமண்ணின் துன்பங்கள் விடியலின் ஓசைகள்!

மாவை போனதெங்கள் மாவெள்ளைச் சவாரி
சாவதற்கும் இடமின்றிச் சலங்கைவிட்டுப் போகிறது!

நோவதற்கு இல்லையடா நீயெழும் காலம்வரும்
மாவீரர் சிதையிருந்து மகனேயுன் கால் எழும்!

வேலிக்குள் நின்றமங்கை வேங்கையாய்ப் போகிறாள்
தாலியாய் நஞ்சுகட்டி தங்கமண்ணைக் காக்கிறாள்!

காலம்வெகு தூரம்இல்லை கனிமகனே நீயுறங்கு!
களம்போகத் தாயழைக்கும் காலம்வரும் நீஎழும்பு!

அரும்புகளின் தூக்கங்கள் அன்னையின் ஏக்கங்கள்
கரும்பேநீ நாளையிந்த காதல்நிலத் தாய்க்கரங்கள்!!

'(வண்டியில் இடம்பெயரும் ஒரு தாயின் தாலாட்டு)

19-மாவீரர்களே!

மாவீரர்களே மாவீரர்களே நீங்கள்
மண்ணின் மீட்புக்களே
மாவீரர்களே மாவீரர்களே உங்கள்
மரணம் உயிர்ப்புக்களே!

மாவீரர்களே மாவீரர்களே -உங்கள்
சுவடுகள் அழிவதில்லை
மாவீரர்களே மாவீரர்களே-உங்கள்
மரணங்கள் நிசங்களில்லை!

உங்கள் குருதி உறைந்த தேசத்தை
உயிராய் நேசிக்கிறோம்.!
உங்கள் சுவடுகள் பதிந்த தேசத்தை
உயிலாய் எழுதுகிறோம்.!

நீங்கள் நடக்கும் பாதை எங்கும்
நிலத்தின் உயிரிருக்கும்
நீங்கள் தாங்கும் மரணத்தில் எங்கள்
நிலத்தின் இருப்பிருக்கும்!!

தானைத் தலைவன் போதனையில்
தமிழின் சேனை வரும்
கூனை நிமிர்த்தும் குலத்தின் இருப்பில்
கொற்றம் நாளை வரும் !

வெற்றியைச் சுமக்கும் வீரரே உங்கள்
வேதம் விடுதலையே!
நேற்றைய துன்பம் இன்றைய வெற்றி
நெஞ்சில் புது அலையே!

20-நீறும் நெருப்பும்

விடியற் பூக்கள் மலரும் நேரம்
விழித்து எழடா தோழா!
அடிமை விலங்கு உடையும் நாட்கள்
ஆர்த்து எழடா தோழா!

அழுவதற் கில்லை எங்கள் தேசம்
எழுவோம் நாங்கள் புயலே!
விழுவதற் கில்லை சுதந்திர தாகம்
வேங்கை ஆவாய் குயிலே!!

தோல்விகள் எதுவும் தோல்விகள் இல்லை
விலங்கு உடையும் ஒருநாள்!
சேல்விழி சிறுத்தை ஆகிய தேசம்
சுதந்திரம் எழுதும் திருநாள்!!

சிதையில் தோழன் மடிவதும் உண்டோ
சிறுத்தைக் கேது மரணம்!
விதைப்பின் உயிர்கள் வீழுவ தில்லை
விடியல் எங்கள் சரணம் !!

உண்மைகள் நீறு பூப்பதாய் இருக்கும்
ஒருநாள் நெருப்பாய் மாறும்
மண்ணிடும் விடியல் மாண்புகள் அதுவே
மானமே சுதந்திரம் ஆகும்!

விடியற் போதில் எங்கள் மண்ணில்
விலங்கு ஒடியும் திருநாள்
படைகள் செய்யும் புனிதத் தமிழா
பண்ணில் உனக்கே பெருநாள் !

## 21-கீறல் இல்லை வானம்

கிழக்கு வெளிக்குது கீதம் படருது
கீறல் இல்லை வானம்-இனிக்
கீறல் இல்லை வானம்-எங்கள்
உழைக்கும் கரங்களில் தீபம் மலருது
உதிக்கும் சமா தானம்-இனி
உதிக்கும் சமா தானம்!

வல்ல தலைமைக்குள் நல்ல காரியம்
வைத்த மானுடம் பாராய்-
வைத்த மானிடம் பாராய்-அட
நல்ல காரியம் கொடையில் மலருமே
நாங்கள் கண்டோம் போராய்-தம்பி
நாங்கள் கண்டோம் போராய்!

பூக்கள் மலர்ந்தன பசுக்கள் நிறைந்தன
பூத்துக் குலுங்குது தீபம்
பூத்துக் குலுங்குது தீபம்-நாம்

தூக்கும் கருவிகள் மானம் ஏற்றின
திசையைப் பாராடா ஈரம்-மண்ணின்
திசையைப் பாரடா ஈரம்!

காற்றின் பிசிறுகள் கையில் வராது
காலம் கொடுத்தது விடியல்-இந்தக்
காலம் கொடுத்த விடியல்
நேற்றுக் குருதிகள் இன்று சுருதிகள்
நிலத்தின் சுவடுகள் தீபம்-இன்று
நிலத்தின் சுவடுகள் தீபம்

(போர் நிறுத்தக் காலத்தில் ஒரு தீபாவளிக்கவிதை)

## 22-தேசம் அவர்கள் சுவடே!

தொகையறா
வைகறையின் கரங்களிலே வண்ணநிறம் போடுதடா
கையிறையின் உரங்களிலே கற்பனைகள் மூழுதடா
மெய்கரைத்த வேர்வைநிலம் வேரெறிந்து வருகுதடா
பொய்கரைத்த வாளரக்கன் போனகதை சொல்லுதடா

பூவரசம் பூத்ததடா பூத்தமுல்லை ஈர்க்குதடா
ஆவரசம் தளிரெடுத்து அசைநிலங்கள் ஆர்க்குதடா!
தாவணியில் பூத்தமங்கைத் தங்கநிலம் வந்ததடா!
பாவணியில் அரங்கேறப் பண்தமிழே சொந்தமடா!
பாட்டு:
இருந்த இடம்விட்டுப் போனான் பாரடா
எங்கள் நிலத்துப் பகைவன்-போரில்
இருப்பும் விடியலும் எடுத்து வந்தவன்
எங்கள் நிலத்துத் தலைவன்!

வேலி வயலுக்குள் நிலவாய் இருந்தவள்
வேங்கை ஆகிப் போனாள்-அட
தாலிக் கயிறென நஞ்சை வரித்தவள்
தானைப் பெரும்படை ஆனாள்!

அடுப்பில் இருந்ததோர் அணங்கு இன்றுபார்
அகிலத் தேடுகள் கண்டாள்-அவள்
இடுப்பில் மாட்டிய ஏவு கணையிலே
எங்கள் நிலத்தை வென்றாள்!

மரணம் நிசங்களாய் ஆனதில்லை இது
மானம் தந்த போர்வாள்-இன்று
சரணம் ஆனதெம் சமா தானத்தில்
சத்தியம் இவளது கூர்வாள்!

தீபா வளியிலே தேசம் பிறந்ததே
தியாகம் கொடுத்த வரமே-இந்த
மேவும் இசையிலே ஓசை அவளதே
தேசம் அவர்கள் சுவடே!(சமாதானப் பேச்சின்பின் வந்தபாடல்)
தேசக்குயில்!

மன்னார் போவோம் வாரியா-என்
மச்சாள் கிளியே சூரியா
உன்னை என்னுள் ஊர்சுமக்க
உதிரம் கொதிக்குது வாரியா?

என்ன மச்சான் பேசுகிறாய்-நான்
இங்கிதம் இல்லாப் பெண்ணோடா!
துன்பம் படரும் என்நிலத்தை
தூக்கி எறிவனோ சொல்லோடா!

கானக் குருவிக் கண்மணியே
கனக்குது உள்ளம் பூமணியே
போனாப் பருவம் வாராது-இதைப்
புரிஞ்சுக்க நேரம் ஆகாது

மாறன் குளத்தில் நீராடி நான்
மயங்கமிடவோ சதிராடி -அட
போர் நிலமான கருவறையில் நான்
பூத்து வருகிறேன் போராடி!

தேசக்குயிலே தீங்குயிலே

தினமும் இசைக்கும் மாங்குயி:ேல
பாசக்குயிலே உந்தனுக்காய் நான்
பார்த்திருப்பேனே பூங்குயிலே!

கருவறை நிலங்கள் போர்மனையாய்
கனக்குது தேசம் பார்மச்சான்!
இருப்பின் நிலமாய் சுதந்திரமாய்
இருப்போம் அன்றே வாமச்சான்!

## 23-தில்லானா தில்லானா

தில்லானாத் தில்லானா தேசம்வந்தது தில்லானா
தேசநிலம் பார்த்துச்சமா தானம்வந்தது தில்லானா

செண்பகமே செண்பகமே சிந்துபாடு செண்பகமே
சொந்தநிலம் சுதந்திரமாம் சிந்துபாடு செண்பகமே

மரணம்வந்த தில்லையிலே வந்ததிந்த மானுடமே
சரணம்புத்த எல்லையிலே சமர்போச்சு மானுடமே

ஏற்றிவைத்துத் தீபமெல்லாம் இலங்குதடா மட்டுநகர்
போற்றிவைத்த ஒளியிருத்தி பொங்குதடா யாழ்நகரம்

எரிமலையாம் எரிமலையாம் என்றநகர் திருமலையாம்
எரிமலைகள் தணியப்புது இதயம்தந்த திருமலையாம்

தீவகமாம் தீவகமாம் தீயர்நின்ற தீவகமாம்
பாவம்பயல் போகஇன்று பண்பாடும் தீவகமாம்

கந்தையா கந்தையா கனடாபோன கந்தையா
காணிநிலம் பார்க்கலையா கள்ளுப்பனை வந்தாச்சு!

தில்லானா தில்லானா தேசம்வந்தது தில்லானா
தேசநிலம் பார்த்துச்சமா தானம்வந்தது தில்லானா!

(ஒப்பந்தத்துக்குப் பிறகு வந்த சந்தோஷக் கூத்துஇது)

## (24)
## கிளியின் கதையும்
## கவிதையும்

பனைமரத்துப்
பச்சைக்கிளியது
பேசும் தமிழ் அதற்குப்
பெரியசுவை
அப்பா என்கும்
அம்மா எனவழைத்து
சும்மா எனக்கூறித்
சும்மாதான் கூப்பிட்டேன் என்கும்!
கூண்டு சுதந்திரத்தைக்
கொண்டு போனது எனினும்
வாண்டுப்பயலாய் வாய்கனத்த கிளி அது!
கைகளில் வரும் கன்னத்தில் முத்தமிடும்
புனைகதை இல்லையிது
தனைமறந்து தமிழ் செய்த
தங்கக் கிளி அது!
கலா எனப் பெயர்
அலாதிப்பிரியம் அன்பாய் வளர்ந்தது.

பேசும்தமிழ் வீட்டுப்
பூனைக்குப் பிடிக்கவில்லை.
இறகுமட்டும் மிஞ்ச
எல்லாம் தின்றது பூனை
வீடு இழவு கண்டது.
ஊன் உறக்கம் சாப்பாடு
ஒருவருக்கும் இல்லை.
அழுதவர் கண்கள்

அந்த ஆத்மாவுக்கு அஞ்சலி செய்தன.
அந்தக்கிளிக்கொரு அஞ்சலிக்கவிதை
ஈழநாடு சசிபாரதி ஏட்டில் வரவு வைத்தார்.
பின்னர் ஒருநாள்......
நீதிமன்றில் குட்டிமணி
நிறுத்திவைத்த சொல்லுரைகள்
கிளியின் கதைபோலே
கேட்டேன் செறிதமிழே!
தமிழீழ மண்ணவனை
தண்டிக்க இந்தமன்றில்
சட்டம் இல்லையென்று
சிங்கள மன்றுக்குச் சேதியிட்ட
அந்தப் பொழுதுகள் நினைவுக்குள் விழுந்தன.
குட்டிமணியை அந்த உரைக்காய்
சுரைக்காய் போல வெட்டி எறிந்து
தங்கதுரையோடு இன்னும் ஐம்பத்தி மூவரை
கொன்று குதறிய வெலிக்கடைச் சிறையின்
இரத்தக் கொடுமையில் அந்தத் தமிழரின்
உயிரழப்பின்போதும் இந்தப்பாடலை நினைத்தேன்.

பாடல் இதோ..

அணிமலர்ச் சோலையும் அடர்மர அடவியும்
பாடிப் பறந்து கூடிக் களித்து..

(25)
## திரும்பவும் அரசிடும் தமிழ்ச்சாதி

விடுதலை மூச்சு எழுந்ததடி ஈழம்
வீரங்கொள் வேங்கைகள் ஆனதடி
பொடிபட்டு சிங்களப் பேய்கள் ஓடிடப்
பொங்கி எழுந்தது தமிழினமே
இடிபட்டு இடிபட்டு இனியொரு வாழ்வோ?
என்று நடக்குது சுதந்திரப்போர்
விடுபட்டுத் தமிழ் ஈழம் மலர்ந்திடும்
வெற்றி குவித்திடும் பாருமம்மா!

கையில் அகப்பை பிடித்த கன்னியர்
காலம் போச்சுது பாரடியோ
பையில் ரவைகள் போட்டு வலம்வரும்
பாவைகள் ஆனாள் தமிழ் அணங்கு
பொய்யா இலட்சியப் பூவை நடந்திடும்
போர்கள் நடக்குது தமிழ் மண்ணில்
நெய்யாய் உயிரைக் கொடுக்கும் மறவரை
நெஞ்சில் சுமக்குது தமிழ் ஈழம்!

தாயும் வந்தனள் தந்தையும் வந்தனன்
தங்கமாய் ஒருமகன் தானும்வந்தான்
பாயும்புலியாய் ஆனது தமிழினம்
பற்றிப் பிடித்தது சுதந்திரப்போர்
சாயும் உடலது தெரிந்தும் எதிர்கொண்டு
சரித்திரம் படைக்கிறான் செந்தமிழன்
தேயும் பிறையது இல்லைநீ பாரடா
திரும்பவும் அரசிடும் தமிழ்ச்சாதி!

(26)
## எனக்குக் கவிதை.....!

கவிதைசெய்வீர் என்றெனக்குக் காதல் செய்தீர்
காரணங்கள் இன்றியெதும் கவிதை இல்லை
புவியீர்ப்பு ஒன்றின்றேல் பூமி கல்லே
பெய்துவிழும் மழையருவி உயிர்கள் இல்லை!
அவிவிழுந்து யாகமெழும் மந்தி ரங்கள்
அனைத்திற்கும் வேதமெலாம் நோக்கம் சொல்லும்
விதையின்றி முளையில்லை எந்தன் பூமி
வேரின்றி எனக்கெதுவும் கவிதை யில்லை!

பள்ளத்தை நோக்கிவழி வெள்ளம் பாயும்
பள்ளம் இருந்தேறும் கவிதை ஊற்றாம்
கொள்ளையிடும் தமிழதுவே கவிதை என்றால்
கொடுவாளும் அதுவேதான் கயமை கொல்லும்
நெல்லுயர நீராகும் நெருப்பே ஆகி
நேர்மைவெலப் போர்முனையின் ஈட்டி யாகும்
உள்ளம் நெகிழ்ந்துவரும் ஊற்றே ஓடி
உள்ளம் இடித்துவரும் குருதி என்பேன்!

சொல்லுகள் கவிந்துவிடின் கவிதை யாகா
தூஷணங்கள் காலத்தை வெல்லா தப்பா
அள்ளிவரக் கரங்களுக்கு மலமா தேவை
ஆகாரம் என்பதுபார் விஷங்கள் அல்ல
இல்லையில்லை இவைஎதுவும் எழுத்தே யல்ல
இனியதமிழ் ஒன்றேதான் பேசும் கவிதை
தெள்ளுதமிழ் ஆர்நிலமும் தேசப் போரும்
அள்ளிவர என்கவிதை அகப்பை யாகும்!

-புதியபாரதி
(நிலப்பூக்கள் புத்தகத்திலிருந்து)

(27)
கருணாநிதி

கருணாநிதி என்போம் காவியத்து நிதிஎன்போம்
பொருணைநதியாகிப் பூப்போடும் தமிழ்என்போம்
அருவிநீர் இவன்தமிழ் அணைகள்கட்டும்
இரவுகள் இவன்பேச்சில் இன்றிப்போகும்
நெருப்புக்குள் தமிழ்வளர்த்த நீர்தான் இவனே
நெஞ்சுரத்தில் ரயில்மறித்த தமிழன்பசுவாம்
பருப்புக்கள் ஒருபோதும் வேகாதிந்தப்
பகலவனின் கவிதையெலாம் பூங்காவாகும்!

இருப்புக்குள் அரசியலை ஏற்காத்தமிழன்
எங்கிருந்தாலு மிவன் ஆயிரம்பொன்
செருப்பாகித் தமிழ்நிலத்தில் சேவையாகி
செந்தமிழுக் கின்னலெனில் களமேயேகி
விருப்பமிகு அண்ணாவால் விளைந்ததம்பி
வீழ்ந்தாலும் எழுந்தாலும் தமிழேஆகும்
கரும்புஇவன் என்றெனவே கவிதைசொல்லும்
களமிவனைத் தமிழன்என்றே காலம்வைக்கும்!

## (அறுபதுகளில் வந்த கவிதை)
## (28)
## நான் எப்படி?

பாரதியாய் நாமமிட்டுப்
பாட்டெழுதி என்தேசச்
சேறெடுத்து நீரெடுக்கும்
செப்புகவி கோடிவைத்து
கூறெடுத்துச் செந்தமிழன்
கொல்கருவி யாகிநிற்கும்
ஊறெடுத்துப் பாரதிபோல்
உருவெடுக்க ஆசைவைத்தேன்!

மீசைக்கவி பாரதியான்
மீக்குயர்தன் தேசமன்றில்
பாசியெனப் படர்ந்தமகன்
பட்டிதொட்டி தெருக்களெலாம்
ஆசைகொண்டு அளைந்தமகன்
அடுக்கிவைத்த விடுதலைப்பா
தேசக்கவி ஆக்கியதே
தேசவிடுதலை ஆனதுவாம்!

ஓசையின்றிப் பிறந்தமண்ணை
ஒட்டடைதட்டிய இப்பிறவி
காசுகாசெனக் கனடியநாட்டிலே
கைலாசம்கண்ட புதுப்பிறவி
மீசைவளைத்துப் பாரதிபோல்
மீக்குயர்கவிதை நூறுவைத்தும்

ஆசைக்குக்கூடப் பாரதியாய்-இந்த
அற்பன்எப்படி ஆகிடுவேன்?

(29)

## ஒரு மணமங்கல வாழ்த்துமடல்....

மங்கள நாளிதனில்
மணவிழாக் காணுகின்ற
திங்களெனும் திருநாயகனே!
தேமதுரத்
தங்கமெனும் சாவகஞ்சேர்
தமிழ் இளவல்
ரகுநாதா!

தெம்மாங்குத் தமிழ்சுரக்கும்
தீவகத்துச் சரவணையூர்...
செங்காந்தள், எழில்மடவாள்
சேயிழையாள்
பரமேஸ்வரியே!

நின்பாங்கு அவனிருக்கும்
நின்விருப்பம் தனைவழுத்தி
அன்பவளை அழகெழிலை
அருங்குணத்து நாயகியை
கைப்பிடித்து நீநடக்கக்
கனிந்தளித்தோம் வாழியவே!

காதல் மணவாளன்
கனியமுதன் பாங்காகும்
போதில் மகிழும் பூம்பாவை
பரமேஸ்வரியே.....
குணக்குன்றுநீ எங்கள் குடும்பத்து
குலவிளக்கு!
அன்பு பாசம் விருந்தோம்பல்
அத்தனைக்கும்,

ரகுநாதன் என்னும்
ரகுராமன் மார்பிலங்கும்
அகல்விளக்கு!
நீயே அவனாய் அவனே நீயாய்
ஆகும் புதுக்கணக்கில்
வாழிய வாழிய என்றே
வாழ்த்துதல் செய்தோம்!

மந்திர மறையெழ வானவர் வாழ்த்த
இந்திரவிழாவில் இணைந்த தம்பதிகாள்!
அன்பும் அறனும் இலக்கணமாகட்டும்
வானும் நிலமும் நும்வசமாகட்டும்!
வண்ணக் கனடா வள்ளுவம் காணட்டும்!
தேனும் பாலும் தமிழாய்ச் சொரியும்
தீந்தமிழ் மழலைத் திருவிழா ஆகட்டும்!
தாலாட்டுத் தமிழும் தமிழ்ப் பண்பாடும்
பனிவிழும் கனடாப் பார்வைகள் ஆகட்டும்!
தமிழன் வாழ்வும் கலை கலாச்சாரம்
எழிலுறு கனடா இனியினிக் காணட்டும்!

வாழிய நீவிர், வாழ்க பல்லாண்டு!
வாழிய வாழி என்றெ
வாழ்த்தினோம் வாழி!!

(30

## )சுவடுகள்...

இந்தப் பொழுதிலும் இன்னோர் நாளிலும்
எழுத்தை மண் சுமக்கும்-நான்
வெந்து மடிந்து எழுந்தேன் நடந்தேன்
என்ற சுவடி ருக்கும்-மண்
சிந்தும் குருதியில் சீறிய தலைவனின்
சீரிய நாட் குவிக்கும்-பிரபா
வந்து பிறந்த வாழ்நிலம்கூட நான்
வாழ்ந்த சுவடிருக்கும்!

(31)
## நாளை களம் வரும்!

அப்பம் இட்டு அதன்பின்னே நஞ்சுமிட்டு
குப்பத்து நாயதனைக் கொல்ல நினைப்பதுபோல்
ஏலேலோப் போட்டு இதழோரம் கடைவிரிக்க
தாலேலோப் போட்டுத் தமிழ்த்தலைவர் ஓடுகிறார்
நாளை களம்வரும் நம்கரத்தில் வாளிருக்கும்
வேளை இதுஒன்றே மிதந்துவரும் இனித்தேசம்
-அறுபத்தி ஐந்தில் என் இளமைப் பார்வையில்

(32)
## என்நிலம்!

சங்கு திரை முழங்கும்
சலசலத்து வாடை வரும்
எங்கள் வயல் வெளிகள்
ஏருழவன் பண் கொடுக்கும்!
கங்குல் விடிந்து வரக்
கமலம் கண் விழிக்கும்
எங்கள்மண் எங்கள் மண்
இல்லையெந்தப் பூமி யெங்கும்!

(33)
## பார்வையின் அழைப்பு

அன்பர்களே,
என் பார்வைகள் ஒரு இயக்கத்தின்
அல்லது
இயக்கங்களின் பிறப்பிடம் அல்ல.....!

இனம் ஒரு இயக்கமாக வேணும் எனும்
இதயத்தின் பிறப்பிடம்

கனத்துப்போன இதயங்களோடு
கனடாவில் நாம்.......!
அந்தக் கதைகளை
கனடா வரவு வைக்கிறது.

வசைபாட வழிகிடைக்கப்
பிசைபடுகிறோம்!

தூசணம் தமிழிலும் இருப்பது
கனடாத் தெருக்களுக்கும் தெரிகிறது.

சண்டைகள் சட்டமன்றத்தில்
நிற்கின்றன.

கொலைகள்-கத்தி, துவக்கு, பொல்,
விஷம் என்றே நிறம் மாறுகின்றன.

எங்கள் நாட்டுப்போர் என்னசொல்கிறது?

சகோதரக் கொலைகளின் சவங்கள்
நிறைக்கின்றன.

அமைதிக்கு வந்தவனே
இயமனுக்குத் தூது சென்றான்.

தமிழனைத் தமிழன் கொல்ல
எசமானர்கள் தேடிக்கொண்டோம்!

நாம் அழிய நமக்குத் துப்பாக்கிகள்
தருகிறார்கள்.

ஆமாம் அன்பர்களே,
என் பார்வைகள்-
கொடுமைகள் சுமக்கும்
கொடுமைகள் மறைந்து

விடிவுகள் சுமக்கும்
விடிவெள்ளிகளைத் தேடுகிறது.

சொல்லும் திறமுடையோர்
சொல்லுங்கள்-
எழுதும் திறமுடையோர்
எழுதுங்கள்.

என் எழுத்துக்கள்
என் தேசத்தின் இரத்த மண்ணுகள்.

என் முகவரி உங்களை
அழைக்கிறது.

(தமிழர் ஒளி, மொன்றியால் அமைப்பின் பார்வை இதழுக்கு ஆசிரியராக அமர்ந்த என் முதல் அழைப்பு இது- தொண்ணூறுகளில்...)

## (34)
## தேசம் எழுதும் தியாகிகள்

நான் ஒரு விடுதலைக் கவிஞன்
அல்ல....
என்பாடல்கள் என் தேசத்தை
உலுக்கியது கிடையாது.....

நான் ஒரு போராளி அல்ல.....
மறந்தும் என்கைகள்
துப்பாக்கிகளுக்காய் மன்றாடியது இல்லை!

இரத்த ஆற்றில் என் மண் நனைகிறது.

இதில் ஒரு துளியும் என்னுடையது
இல்லை....!

கலைக்கும் ஆமியைக் கண்டு
கால் தெறிக்க ஓடியவன்-

உயிருக்குப் பயந்து ஊரைவிட்டே
ஓடியவன்-

அலைக்கும் கடலாய் மண்ணின்
அவதி தெரிகிறது.

இவை எல்லாம் கடந்து
இனிக்கும் கனடாவில் என்பவனி
நடக்கிறது.

உயிர்ப்பயம் இன்றி உலா வருகிறேன்.

எனினும் ஈழப்போர் எனக்கு முக்கியம்.
ஏன்?

ஈழமண்ணின் தேசமக்கள் இரத்தக் குளிப்பில்
இருப்பது காட்டி....
பூக்கள் மலராப் பொழுதுகள் இருப்பினும்
பிணங்கள் மலரும் பொழுதுகள் சொல்லி
ஈக்களும், நாய்களும், பேய்களும் பிணங்களும்
இணைந்து வலம்வரும் என்
ஈழத்தெருவை வரைபடமாக்கி-
கனடா நாட்டில் வாழத் தகுதிகேட்கும்
வண்ணமுறு கவிஞனப்பா நான்!

இன்னும் எனக்குப் பிரச்சினைகள் ஏராளம்....
நீளும் குடுமி தன்னை
வெட்டாதே என்கிறது.
காது தன்பாட்டில்
கடுக்கண் தேடுகிறது.
கால் நடந்து களைத்துப்போய்
காரைத் தேடுகிறது.
கார்தேடும் படலம்
காருக்கு நிறம் தேடுகிறது.
கோழி, நண்டு, மாடு,
குளிருக்கு வாவா என்கிறது.

சாப்பாடு தனக்கு முதல்
தண்ணி போடச் சொல்கிறது.
தலை எங்காவது இடி...போ
பதவி பெரிது பெரிது என்கிறது.
ஆசை அளவு கடந்துபோய்
காசு காசு என்கிறது.
வீடு வாங்கு, வில் என்கிறது.
வேதம் புதிதாய் விளக்கம் தருகிறது.
விடாதே பிடி-
பிடித்தால் அடி-
அடித்தால் அடி-
முடித்தால் முடி-
கடித்தாலும் கடி......

ஆமாம்....
உபதேசம் கேட்ட அர்ச்சுனர்கள்
கனடாவில்
இடம் மாறலின்றி எல்லோரும்
குழுக்களாய்....
தேவாரம் பாடத் திருவிழாக்கள்
நடக்கிறது.

இதற்குள் ஏனோ என்னை
அழைத்தீர்கள்...

தலைப்போ என்னை
மலைக்க வைக்கிறது.

## (35)
## தேசம் எழுதும் தியாகிகள்

பேசத் தகுதி இல்லதாவனுக்கு
கூசும் தலைப்பைக் கொடுத்தவரே....!

என் மண்ணின் மைந்தரை,
தன்னைக் கொடுத்து
உயிரைக் கொடுத்து
தமிழாள் கூந்தலில் பூவைச்சூடும்
இந்தப் புனிதரை-
மண்ணும் வானும் நிலமும் சுவாசித்த
இந்த மறத்தமிழர் மூச்சை
சொல்லும் ஒவ்வொரு வேளையும்
என் பாவம் தீர்க்கிறேன் அன்பரே....

தேசம் எழுதும் தியாகிகள்
சுதந்திரக் கோவிலில் இவர்கள்
தெய்வச் சிலைகள்!
(மொன்றியல் உலகத் தமிழர் விழாவில்
ஒரு கவியரங்கில்)

## 36
## வாணிமகள் வீணை செய்தாள்!

கஞ்ச மலர்க்கையும் பஞ்செனும் மேனியும்
கருணை இயற்றிடு மலர்முகமும்
கொஞ்சி வழிந்திடு குறுநகையும் தோகைக்
கோலமயிலிடும் சிறுநடையும்
விஞ்சு வனப்புய லாகி எழுந்திட
வீணையிசையினில் நாதம் செய்யும்
வஞ்சி மகளொரு வண்ணமுதாள் எந்தன்
வாசம் வந்தெழில் கோலம் செய்தாள்!

தெள்ளு தமிழினில் தீஞ்சுவையில் கன்னற்
தேமதுரம் தரும் தேன்மழையில்
கொள்ளை கொடுத்தெழு கோடி தமிழ்க்கவி
கொட்டி அளந்திடும் என் கவிஞர்
பள்ளி மகிழ்ந்தவர் பாய்கினில் ஆடிடும்
பாவை என்றவள் அருகணைந்து
வெள்ளைத் தாமரை மீதிலமர்ந்தொரு
வீணை செய்தாள் அந்த வாணிமகள்!

(சரஸ்வதி பூசை ஒன்றில் யாழ். ஈழநாடு அலங்காரம் செய்த பாடல். எழுபதுகளில் சசிபாரதி இதனை வெளியிட்டார்)

## 37-தூய்மை உள்ளவனின் எழுத்தே வெல்லும்!

அண்ட சராசர
அரசர்க் கெல்லாம்
கெண்டியில் இருந்தும்
கெட்டநாற்றம் வரும்

கற்பழித்துக் கொண்டு கண்ணகிக்குப் பாராட்டு
கருச்சிதைவைச் செய்துகொண்டு
மழைலைகளுக்கு மன்றங்கள்.......

கட்டியவள் கைக்குழந்தை
கண்ணீரின் மிதப்புகள்,
சிகப்புத் தெரியாமல்
சின்ன வீடுகள்.

வேசிக்கும் சில நேரங்களில்
நியாயம் உண்டு
விதிவிலக்கு வேடதாரிக்கு
மட்டுமே!

## 38-சேறு குழம்பித் தாமரை கலங்குமா?

சேறு குழம்பித் தாமரை கலங்குமா?
சிதம்பரம் அசைக்க முனியால் முடியுமா?
ஆறு கலங்கி இமயம் இடியுமா?
ஆதவன் வரவை ஆணைகள் தடுக்குமா?
தேரைகள் கூடித் தேரை அசைக்குமா?
திரைகடல் அசைவை நாரை நிறுத்துமா?
பாறைகள் கைகள் பட்டு உடையுமா?
பாதி மனிதா பேச்சை நிறுத்தடா!

விட்டில் விழுந்து மின்குமிழ் உடையுமா?
வீணையின் நரம்பைக் கறையான் அரிக்குமா?
முட்டிகள் முட்டி முழுப்பனை முறியுமா?
முட்டாள் முட்டிக் கோபுரம் சரியுமா?
கொட்டும் முரசைத் திட்டுகள் தடுக்குமா?
கொள்கை அற்றவன் விள்ளுதல் கேட்குமா?
கெட்டவர் கொட்டம் எட்டுநாள் வரைக்கும்
கேளடா மானிடா என்தமிழ் சிறக்கும்!

## 39-வாணி எனக்கொரு வீணைகொடு

வாணி எனக்கொரு வீணைகொடு
    வையம் அருளிட ஆணையிடு
காணி நிலக்கவி பாரதிபோல்
    கண்கள் மூடஎன் பூமிகொடு
தோணிகள் உலவிடக் கடல்நீளம்
    தென்றல் மலர்ந்திடும் வயலோரம்
காணும் அனைத்திலும் என்பாடல்
    காண வையடி கலைமகளே!

## 40-எட்டப்பம் விடுவாய்!

பண்டார வன்னியன் படுகுழிக் கிடங்கை
கிண்டிய காக்கைக்கு கிடைத்தது பாணடா!
உண்டு மகிழ உரிமை விற்ற அந்தப்
பண்டைய கதைக்குப் பாடைகட்டு! பாடைகட்டு!!

## 41-தாய்!

நிலமணலில் படம்கீறீ நிலவுகாட்டி
    நில்லாதே வாவென்று கைகள்நீட்டி
பலமான தமிழ்செறியப் பாடல்செய்து
    பாலனா யிருந்தழவே பாலைஊட்டி
குலமானம் தமிழ்உணர்வு கொண்டசோறு
    குவிமடியில் வைத்தவளே தேவாரத்தை
நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
    நித்தலுமென் றோதுவித்தாள் எந்தன்தாயே!!

## 42-மானிடம் நானாய்,,,,,,,,,!

நாளை ஒருநாள் வேளை வருமே!
என்கவி அரசாளும்-செங்
கோலை நிமிர்த்திய குவலய மானிட
கொற்றம் முரசாகும்!

## 43-சிறியதாய் பிரியும் நாளில் ஓடோடிப்போன ஒரு நண்பனின் துயரமாக...

அன்னையே உன்னைப் பார்க்க
    அலைகடல் கடந்தே வந்தேன்
என்னைநீ பார்த்தாய் உந்தன்
    இதயத்தின் ஆழம் ஓடி
சொன்னதோர் ஆழ அன்புத்
    சொற்களில் மிதந்தேன் நெஞ்சில்
கன்னலாய் இனிக்கும் வேளை
    கண்முனே பறந்தாய் அம்மா!

எந்தனின் தாயே கூட
    உடன் பிறப்பான அம்மா
சிந்தனை தனிலே அன்னைத்
    திருமுகம் வேறே காணோம்
உந்தனை எந்தன் அன்னை
    உருவெலாம் ஒன்றே அன்றோ
வந்தனை செய்ய வந்தேன்
    வழிசொல்லிப் போனதெங்கே?

என்னைநீ பார்த்த பின்பே
    இறைவழி சென்றாய் உந்தன்
இன்னுயிர் அக்கா கொண்ட
    இல்லத்தே விரைந்தாய் தானோ?
மன்னுயிர் மீது செய்ய
    மானுடம் விதைத்த தாயே
என்னுயிர் துடித்து வீழ்ந்தேன்
    எனையெண்ண மறந்த தேனோ?

நிலத்தினில் தாயே யாகி
    நேசித்த உயிரே விண்ணார்
நிலத்தினில் இறையின் தாளை
    நினைத்துமே விரைந்தாய் தெய்வ
பலத்தினில் இறைவன் சொல்லை
    பாரிலே யார்தான் வெல்வார்
உளத்தினில் எங்கள் தாயே
    உலகுள்ள அளவும் வாழ்வாய்!

## 55-கந்தனே வருக...

மங்கலச் சங்கொலி மத்தளநாதம்
    மாதவ அந்தணர் மந்திரகீதம்
பொங்கிடப் பொற்கரம் வேலினைஏந்தி
    பூம்புகல் நல்லையில் பொன்மயிலேறும்
திங்கள் வனப்புயல் சேல்விழிமாது
    தேமலர் வள்ளியின் திருமணவாளா
கொங்கலர் பூச்சரம் சூடியகோலம்
    கோடிட நான்மணித் தேரினில்வாராய்!

**(நல்லைக் கந்தன் தேர்த்திருவிழா அன்று எழுபதுகளில் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது)**

## 45-பிறந்தபதியைப் பாடுங்கள்!

சேரரும் சோழரும் சேர்ந்தே ஒருகாலம்
வீரர் பாண்டியர் வேந்தர்க் கொருகாலம்
ஈழப்பெரு நல்லூர் இலங்கிய சங்கிலி
ஆளும் அரச அரசர்க் கொருகாலம்
வன்னிப் பெருநில மாமன்னன் பண்டாரன்
அன்னைப் புலத்தே அழகாய் ஒருகாலம்
இராவணனார் நிலத்தே எழிலாய்க் கண்டியிலே
மருவில் அரசர் மகுடத்தே ஒருகாலம்
செருவில் இன்று செந்தமிழர் புலிநிலத்தே

கருவாய் உதித்த கன்னித் தமிழணங்கை
வருவாய் என்றால் வந்தற்றும் ஏந்திளையை
தருவாய் என்றதும் தந்தே நம்நாடு
அருகே நிற்கும் அமுதத்து வஞ்சியை
உருவாய் என்னுள் உறையும் தமிழொடு
அனலைப் பெருநகர் ஆக்கிய தமிழின்
புனலைக் கனியை பெய்த நறுஞ்சுவை
கனலைக் கன்னலைப் கனியை அமுதை
மனதை நிறைக்கும் மன்றிலே வந்தேன்.
என்னுளே கொற்றம் இயக்கிடும் தமிழே
என்முனே கவித்திறன் ஆன்ற தலைவனே
மன்னிய தமிழில் மகுடத் தூன்றிய
என்னினக் கவிஞரே இன்றைய நாளில்
தன்னினம் நாடி தமிழினம் நாடி
தமிழ்தரும் இன்பச் சுவையினம் நாடி
மன்றிலே குவிந்த மக்களே எந்தன்
அன்பிலே குவிந்த வந்தனம் செய்தேன்!

பிறந்த பதியைப் பேசுதல் இன்பம்
தொலைந்த வாழ்வைப் பேசுதல் இன்பமோ?
பிறந்த பதியும் தொலைந்த வாழ்வும்
சிறந்த தலைப்பதாய்க் கொள்ளேன்அறிவீர்!

சின்னக் கன்று துள்ளி விளையாடச்
சித்திரை பிறக்கும்
செந்நெல் அறுவடையாய் சிரித்துவந்த சிகப் பரிசி
நெய் பழம் சிறக்க நிறையும் பொங்கல் அன்றோ!
வான்வெடி சிரிக்கும் வண்ணச் சிறுவர்
மான்வெடி கொண்டு மகிழ்வர். வஞ்சியர்
மின்னும் மாங்கனி மேவும் தாவணி
அன்னம் போலே அழகிடக் கவர்வர்
அரிச்சனைத் தட்டும் ஆரமும் துகிலும்
வரித்துப் பவனி வைப்பர் மாதர்கள்
சித்திரைத் தேரை சேர்ந்தே இழுக்க
முத்திரை கொள்ளும் ஆடவர் தோட்புயம்
ஏறிஅமர்ந்து இழுக்க இறைவனின்
ஊர்வலம் எல்லாம் ஊர்தொறும் நிகழும்!

காலைப் பனியைக் கழுவா மரக்கறிகள்
வாலைக் குமரியென வந்திடுவார் சந்தையிலே
தென்னை இளநீர் தேன்கதலி அம்பலவி
சின்னப் பச்சை சிவப்பு மிளகாய்கள்
இணுவில் மரவள்ளி மிருசுவில் கத்தரி
அனலைப் பனைக்கடகம் ஆங்காங்கே சிறப்புக்கள்.
தீவின் செல்வச் சிறப்புப் புகையிலைகள்
மேவிக் குவிய வெங்காயம் முடிச்சாக
காவ முடியாமற் காசுபணம் சேருமப்பா!

அப்பர் ஆங்கே ஆடிவரப் பாடிவரச்
சுப்பர் பனைகள் செய்யும் பங்குனிக்கள்
கோண்டாவில் திராட்சை குவியம் நகரத்தே
வேண்டக் குவியும் கடைப்பேலி பேரழகு!
உருளைக் கிழங்கு பெருங்கரணை கீரை
மருவிக் குவியும் மருதமட அங்காடி
கிளிநொச்சி மன்னார் கிழக்கு மட்டுநகர்
வளமிக்க முல்லை வண்டல் நிலமுறைய
அம்பாறை மூதூர் அழகுத் திருமலையாம்
மும்மாரி பொழியச் செந்நெல் சிறந்தோங்கும்.

சந்நதி நல்லூர் சனம்திரள மடுமாதா
இன்னும் இருக்கிறது! எல்லாம் இருக்கிறது.!!
ஆனால் என்ன? அதற்குள்ளே நாம் பிரிந்து
போனால் என்ன? நாமே போய்விட்டோம்.
பாதம் செருப்பின்றிப் பட்டமண் மறந்தேதான்
வேதம் புதிதாய் மிகக் கொண்டோம்.
காதுக்குத் தோடு களிசான் உரிந்துவிழ
மாதுக்கு மயிர்வெட்டி மறந்தோம் தமிழ்வாழ்வு.
ஆச்சா, பூச்சா, மிச்சோ, கசா என்று
பேச்சுக் குதவாமல் பெயரிட்டோம் குழந்தைக்கு.
பாட்டிக்கு நாவில் படாத பெயரைநாம்
பூட்டிக்குச் சூட்டப் பெரிதும் மகிழ்கின்றோம்.
துப்பாக்கி ஏந்தித் தெருத்தெருவாய்க் கனடாவில்

தப்பாக்கிச் சட்டத்தை தறித்தோம் அழிந்தோம் நாம்!
பெற்றபதி மண்ணை, பிறழா நிலமடந்தை
உற்றவள் தன்னை உயிர்கொடுக்க தற்கொடையில்
வீரம் செறிந்த விடுதலைப்போர் ஆடுகையில்
ஓரம் எடுதவர்கள் உருவழிக்கக் காணுகிறோம்.
வானதியாள் எடுத்த வரலாற்றுக் கவிவரிகள்
ஆனவராய் எழுதி அகிலமெலாம் வாருங்கள்!
அழுதவராய் எழுதும் அழுக்கும் ஓசைகளும்
கவிதைகளாய் எழுதிக் காட்டும் மனிதர்களும்
அவலங்கள் வாழ்வும் தொலைவும் துன்பமெலாம்
சபலங்கள் காட்டிச் சாகடிக்கும் கலைகளையே
போட்டுப் பயனில்லை பொங்கியெழும் தேசம்
மீட்டும் எழுத்தினிலே மேவிவரும் வாழ்வென்பேன்!
நிலம்பெயரா திருக்கும் நிலத்தை எழுதுங்கள்
நிலப்போரில் உயிர்கொடுக்கும் நிலமகளை வழுதுங்கள்!
நிலம்பெயர மாட்டாது நிலவாழ்வும் மாறாது.
புலம்பெயரப் போனவர்கள் பிதற்றலெதும் வாழாது
தொலைந்தது வாழ்வென்ற தெருவழுகைநிறுத்துங்கள்
கலையும் வாழ்வும் கனிநாடும் வெல்லுமடா!
(அனலைதீவுக் கலைவிழாவில்)

## செல்வா நீ போனதெங்கே?

நில்லென்ற போது நின்றோம்
நெடும் புயல் இது
செல் என்றபோது சென்றோம்
செகமாணை ஈது என்று
வெல்லென்ற போது காங்கேசன்
வெற்றியைச் சேதி சொன்னோம்
சொல்ஒன்று இன்றி எங்கள்
செல்வாநீ போனதெங்கே?

(காங்கேசன்துறையிருந்து செல்வா எனும் எங்கள்
தந்தையைச் சுமந்துவந்த பூம்பல்லக்கு வீதியெங்கும்
ஐயாயிரம் பிரதிகளை மக்கள் கண்ணீரோடு ஒத்தடம் செய்த ஐந்து பாடல்களில் இது ஒன்று)

## 46-நாளெல்லாம் நலமுடனே வாழிவாழி!

சீர்மேவ இறைமேவக் கல்வியோடு
திருமேவத் தமிழாயத் தேசம்மேவ
ஊர்மேவக் குடிமேவ உறையுள்மேவ
உயர்வாயாம் எனவாழ்த்த யோகர்சாமி
பேர்மேவச் சிவநேசன் என்னும்தெய்வப்
பெயரிடவே இன்றகவை அறுபதாகி
பார்போற்ற அதிபனென வாழும்ஏறே
பல்லூழி வாழியவே வாழ்கவாழ்க!

கோப்பாயின் கல்விநெறிக் கிறிஸ்துநாம
கொண்டதிரு உயர்வாய கலைகளாற்ற
தோப்பாய கல்லூரிக் கதிபனாகித்
தேருமிகத் தறிவாற்றல் நல்கத்தேனார்

மூப்பாயத் தமிழாயத் துறைகள்தோறும்
மூதறிஞர் பலராகக் கல்விதந்த
காப்பாளன் சிவநேசன் பலவாய்இன்னும்
கனடாநற் சேவையொடு வாழ்கவாழ்க!

கனடாவந் துற்றதெனின் அதிபன்இன்று
கனிந்தகவை அறுபதெனக் காணின்இன்னும்
கனமாய பணிகளெனத் தமிழர்வாழ்வில்
கல்விநிலைக் களம்மேவ பணியேயாற்றும்
இனம்மேவ நற்சேவை புரிதல்கண்டோம்
இளைப்பாறாத் தமிழறிஞன் தமிழர்தாகம்
தினம்ஏற்றத் தாயகத்தேன் ஏற்றும்கல்வித்
தேரேற்றப் பல்லூழி வாழிவாழி!

தன்னினிய மனைமக்கள் தமிழின்ஈழ
தகைமண்ணின் உயிராய மக்களோடு
மின்னுமொரு தாரகைத்தேன் அறிஞனாகி
மேவுவொரு கனடாநல் மக்களோடும்

சென்னியெனப் பணியாளும் பண்பேயாளன்
    சிவநேசன் காணகவை அறுபதார்க்க
நன்னினிய வாழ்க்கையொடு நாடுபோற்ற
    நாளகவை நூறு கண்டினிது வாழ்க!

(கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சின்னையா சிவநேசனின் அறுபதாம் அகவையை வாழ்த்திய வாழ்த்துப்பாக்கள்)

## 47-வைரமுத்துவுக்கோர் வரவேற்பு....

தலைவரே வருக இன்று
தமிழனின் கனவு என்னும்
கலையினான் வீணை மைந்தன்
கண்டநூற் பதியம் வைத்து
வெளியிடும் விழாவில் இன்று
வேதியர், அறவோர், ஆற்றல்
மலையிடும் தமிழர் கண்டேன்
மன்றிடும் பெரியீர் வாழி!

தமிழனின் கனவு காண
தமிழின்பே ரினிமை காண
அமிழ்திடத் தமிழை வைத்த
அன்பினான் வருக எங்கள்
தமிழகம் உதயமாகித்
தாரணித் தமிழர் நெஞ்சில்
தமிழெனப் பதிந்த வைர
முத்துவே வருக என்றேன்.

பேருரை நல்க  வந்தோர்
பெருங்கவி கூட வந்தோர்
சீருரை செய்ய  வந்தோர்
சிறப்புரை ஆய்வோர் இந்த
வாருரை செவியில் வாங்கி
வள்ளலாய் நூலை வாங்கி
பாரியாய் வந்த அன்பீர்
பலரையும் வரவேற் கின்றேன்.

காணிபேர்  நிலங்கள் இன்றிக்
கனித்தமிழ் ஒன்றே என்னும்

வீணைபேர் மைந்தன் வைத்த
விழாவிலே தமிழ கத்தின்
ஏணியாய் நிற்கும் தமிழை
ஏறெனும் கவியின் கோவை
ஆணையாய் எந்தன் நெஞ்சம்
அகத்திட வரவேற் கின்றேன்!

தமிழனைக் கண்டோம் எங்கள்
தாயகம் கண்டோம் வைர
அமிழ்தினைக் கண்டோம் முத்தின்
அருங்கடல் கண்டோம் இந்த
கமழ்திரு வீணை மைந்தன்
கண்டதோர் இனிய மன்றில்
புகழொடு தமிழைக் கண்ட
புனிதனை வரவேற் கின்றோம்!

## 48-அலையோசை வாழ்க!

வளையோசை வருகை தந்தால்
    வருமில்லம் இன்ப மாகும்
களையோசை போகு தென்றால்
    கதிரோசை வீறு கொள்ளும்
மழையோசை வருகை தந்தால்
    மண்ணிலே பசுமை துள்ளும்
அலையோசை வருகு தென்றால்
    அகமெலாம் தமிழே சிந்தும்!

வலையோசை கேட்கு தென்றால்
    வாரிடும் முத்தின் ஓசை
மலையோசை கேட்கு தென்றால்
    மடியினில் வண்டல் ஓசை
சிலையோசை கேட்கு தென்றால்
    சிற்பியின் தெய்வ ஓசை

அலையோசை கேட்கு தென்றால்
அதுவெலாம் கலையின் ஓசை.

ஆனந்து என்பேன் அவரை
அவர்என்னை அத்தான் என்பார்
வாரன்பு கொண்ட பாசம்
வந்திங்கே பெற்ற பாசம்
ஊரன்பு கொள்ள ஈழம்
உயிர்தந்த திருமலையின்
பேரன்பு கொண்ட மைந்தன்
பெருமகன் தமிழே ஆனான்!

சொல்லியா தெரிய வேண்டும்
சீரிய தொழில் நுட்பத்தின்
கல்லையாய் கைகள் நெய்யும்
கலையிலே பேறு பெற்றோன்

இல்லையோர் துறைதான் என்ற
இடம்விட்டுப் பல் துறையாய்
எல்லையே விரியும் நுட்ப
இயன்றவன் ஆனந் வாழ்க!

அன்னவன் அலையின் ஓசை
ஆண்டு மூன் றகவையாக
மன்னவன் போலே இந்த
மன்றுளே உங்கள் முன்பு
இன்னெழில் முகத்தி னோடு
எழில்தமிழ் ஆளும் செம்மல்
இன்றொடு நாளை என்றும்
இலங்கிட வாழ்த்துச் செய்தேன்.

அன்பரே இந்த நாட்டில்
அறிவியல் உண்டு ஆனால்
முன்புபோல் நாங்கள் இல்லை
முல்லைபோல் பனியோ வெள்ளை
இன்னமும் எங்கள் தலையோ
இறப்பிலும் கறுப்புக் காட்டும்
வண்ணமாய் வாழு கின்றோம்
வகைதந்த நாடு வாழ்க!

ஆறுமண் நடை பயிலும்
அழகுமண் மக்கள் இங்கே
ஏறுபோல் பீடு நடை
என்பதை விட்டு விட்டார்
கூறு வளைக் களிசானாய்
கூட்டி இழுத்து வர
மாறுபட்ட நொண்டி நடை
மாற்றுநடை என்று விட்டார்!

தோடு புனைந்த வர்கள்
திரும்புகிறார் ஆனதினால்
தோடுடைய சிவனை என்ற
தேவாரம் விட்டு விட்டோம்
ஆடை புனைந்து வந்த
அழகு மணித் தேவியர்கள்
கோடைக்கு மாறு கிறார்
கோலம் அவர் தமிழில்லை!

இதழியல்கள் மலிவு என்பேன்
ஊடகமும் அதுவென்பேன்
புதுப்புதுவாய் தரும் அழகு
புதுவியலைக் கொள்வம் என்றால்
விதம்விதமாய் முகங்க ளையே
விற்று விட்டு நிற்கின்றார்
நிதம் இன்று நாளையொன்று
நிற்பார்கள் போலி என்பேன்!

அலையோசை போன்ற எங்கள்
அழகுதமிழ் வான் ஒலிகள்
நிலைஏதும் மாற்ற மில்லை
நினைவெல்லாம் கலை வடிவம்
வலைபின்னித் தருவார் நம்
வந்த இடம் அறிவார்கள்

கலையோசை நாளெ ல்லாம்
கமகமப்போர் வாழியவே!

ஆனதினால் அன்பர்களே
அகவைப் புது நாளில்
அகங்குளிர வாழ்த்து வைத்து
அலையோசை மேடை வந்தேன்!
என்னை அழைத் தாரும்
என் கவிதை கேட்டாரும்
நன்றி மிகக் கொள்வீர்
நாட்கள் இனி நமதே! (ரொறன்ரோ-2002)

## 49-மாமனிதன் போனதெங்கே?

மனிதம் உடைந்ததம்மா மாமலை சாய்ந்ததம்மா!
புனிதம் வீழ்ந்ததம்மா பீறு நடை ஓய்ந்ததம்மா!
குனியோம் தமிழன் என்ற குரலே மாய்ந்ததம்மா!
தனிநீதிச் சட்டமுனி தரையினிலே வீழ்ந்தம்மா!

அடங்காத் தமிழன்என்ற அழகுமகன் போனதெங்கே?
வணங்கா முடிபுனைந்த மாமன்னன் போனதெங்கே?
முடங்காத் தமிழ் நிதியம் முடங்கிவிழப்போனதெங்கே?
முத்துத்தமிழ் நீதிமன்றம் மூச்சுவிடப் போனதெங்கே?

மாமனிதன் ஆகநின்ற மறத்தமிழன் போனதெங்கே?
மண்மனிதன் ஆகநின்ற மாவீரன் போனதெங்கே?
பாமகனாய் வரலாற்றுப் படம்போட்ட தலைவனெங்கே?
பாய்ந்துவரும் ஆங்கிலத்துப் பார்புலமைபோனதெங்கே?

பொழுதே பட்டதுவோ பொன்நிலவு தூர்ந்ததுவோ?
விழுதே ஒடிந்ததுவோ வேங்கைநிலம் சோர்ந்ததுவோ?
அழுதே புரள்வதற்கோ ஆண்டவனின் விதியிதுவோ?
எழுதோள் புயவீரம் இப்படியா வீழ்வதுவோ?

கண்பட்ட மாந்தரலோ கவரிமான் வீழ்த்தினரே
காதல்நில மன்னவனைச் சதியிட்டு மாய்த்தனரே
புண்பட்ட தமிழினத்துப் புல்லர்கள் தொலையாரோ
பொற்தமிழர் மாவீரம் பொங்கியெழப் பாயாதோ?

தங்கமகன் வீழ்ந்தநிலத் தாரகமாய் நாம்எழுவோம்
பொங்குமண் தான்எழுந்து பூத்தகுமார் நாம்அறிவோம்
எங்கள்குலம் மீள்வதற்கு ஏற்றபணி செய்திடுவோம்
அந்த வழிஒன்றேதான் அவர்க்கெங்கள் அஞ்சலியாம்!

## 49-வாழிய தமிழர் தகவல்

நினைக்கின்ற போதி லார்வாள்
நித்திரை தனிலும் சேர்வாள்
மனைக்குளே நடமே யாகி
மகிழ்வினைத் தருவாள் இந்த
வனப்புயல் அறிவு மாந்தர்
வண்ணமார் சபையி னாங்கே
எனைக்கொண்டு வந்தாள் தமிழை
ஏத்தியே வாழ்த்துச் செய்தேன்!

அந்தணர் அறிவோர் சான்ற
அகவுளார் மனித மேன்மைச்
சிந்தையார் சிறப்பு நல்கும்
செயலதாய் தமிழர் முற்றம்
வந்துபேர் உலகைக் வீட்டு
வாசலில் தந்து நிற்கும்
உந்துதேன் வானலைக் கும்
ஒப்பிலா வாழ்த்துச் செய்தேன்1

தகமைக்கும் தமிழர் வாழ்வுத்
தகவலைக் கொடுத்தே எங்கள்
அகமைக்கும் அறிவு காட்டி
அவனியில் புதிய வேரின்
வகைவைக்கும் சட்டம் மனித
வந்தனம் பேசி இங்கே
புகவைக்கும் தகவல் பேசும்
பேரியல் வாழ்த்துச் செய்தேன்!

அவையிலே அரங்க மிந்த
அணிநகர் துரந்தை ஆளும்
சபையிலே விருது செய்யும்
சரிநிகர் விழாவைக் காட்டும்
சுவையிலே என்றும் புதிதாய்
செய்திடும் திருவும் பக்கம்
தவமிடும் றஞ்சி யோடு
தகவலார் கூட்டம் வாழ்க!

ஆண்டொரு புதிது கொண்டு
அழகிலே புதுமை கண்டு
ஈண்டினி தமிழர் வாழ்வில்
இளைஞனாய் தகவல் ஏடு
வேண்டுவார் நண்ப னாகி
வீட்டிலே அறிவு காட்டும்
நீண்டதோர் பாதை தன்னில்
நிலைத்திட வாழ்த்துச் செய்தேன்.!

(தமிழர் தகவல் ஆண்டு விழாவில்)

## வாழ்க பாஸ்கி நெஞ்சம்...

நினைக்கின்ற போதி லார்வாள்
நித்திரை தனிலும் சேர்வாள்
மனைக்குளே நடமே யாகி
மகிழ்வினைத் தருவாள் இந்த
வனப்புயல் அறிவு மாந்தர்
வண்ணமார் சபையி னாங்கே
எனைக்கொண்டு வந்தாள் தமிழை
ஏத்தியே வாழ்த்துச் செய்தேன்!

கவியிலே கனிந்த செம்மல்
கனித்தமிழ் மரபின் ஏந்தல்
புவியிலே ஈழ மேன்மைப்
புதல்வனாய் அறிவின் ஆற்றல்
அவையிலே சிறக்கும் கந்த
வனமதாய் மன்றி லார்த்துச்
சுவையெழத் தமிழே செய்யும்
செம்மலை வாழ்த்துச் செய்தேன்.

பாலபாஸ் கரனார் இந்தப்
பண்பியல் அரங்கே தன்னின்
கோலமாய் நிற்பான் தன்னை
குவலயம் அறிவு ஆற்றல்
சீலமாய் உறைவான் தன்னை
சிறப்புறு விழாவில் ஏற்றும்
பாலமாய் நிற்கும் ஏந்தல்
பண்பினான் வாழ்த்துச் செய்தேன்.

ஆற்றலும் அழகும் தமிழை
அணியிடும் கலையின் கூட்டம்
நாற்றிசைப் புலமே வந்தும்
நாளெலாம் தமிழைப் போற்றும்

வீற்றிடும் எங்கள் மாந்தர்
விழுமியம் காதல் செய்வோர்
ஆற்றிடும் அவை யுளோரே
அகமிடும் வாழ்த்துத் தந்தேன்.

பேசுவோர் இசையை நல்கிப்
பெய்தமிழ் கலையை மல்கிப்
பாசிகள் மொழியின் கண்ணே
பற்றிடா வண்ணம் நிற்கும்
மாசிலாக் கலைஞர் வார்ப்பின்
மன்றிலே நூலிற் றோய்ந்து
ஆசியை நிதியே ஆக்கும்
அகத்துளார் வாழ்த்துச் செய்தேன்.

கன்றுகள் துள்ளி ஆடக்
கனக மாங்கன்று ஆட
தென்றலாய் வசந்த மாட
தினையொடு வரகு முற்றி

நின்றிட நிலங்கள் எங்கும்
    நெற்குவைக் குவியல் ஆட
இன்றிட வந்த ஆண்டு
    எம்நில வாழ்த்துச் செய்தேன்.

உள்ளத்து உறவின் ஏக்கம்
    ஓசையும் கடலும் பொங்கி
வெள்ளமாய் காணும் அந்த
    விளைநிலத் தூறல் விஞ்ச
தெள்ளிய கவிதை யாகத்
    தேக்கிய பாஸ்கி நெஞ்சம்
முள்ளிலே நின்றும் விடியல்
    முகிழ்த்தவன் வாழ்க! வாழ்க!!

ஆன்றவன் கருத்தி னோடே
    அலைகளாய் பாயும் ஓயா
வேங்கைகள் நாடும் எங்கள்
    விழுமியம் கலைகள் யாவும்
தோன்றலாய் மீண்டு மாகத்
    துறைநிலம் வழுதி வாழ்த்த
ஊன்றுகோல் பாஸ்கி வாழ்க
    உறைநிலத் தமிழீர் வாழ்க!
(பாஸ்கியின் கவிதைநூல் வெளியீட்டு விழாவின் வாழ்த்துக்கள்-ஸ்காபரோ-2000))

## 50-தேசவீரன் தும்பனின் நாமம் வாழ்க!

கம்பனின் தமிழே இராம
    காப்பியத் தழகே என்றும்
நெம்புகோல் இதயத் தூன்ற
    நிலக்கவி பார திக்கு
அம்புபோற் பாய நெஞ்சம்
    ஆனநற் தமிழே மைந்தன்
தும்பனைப் பாட எந்தன்
    தூரிகை வாராய் அம்மா!

அச்சுதம் பிள்ளை அண்ணா
    ஆருயிர்க் கவிதை மேவ
கச்சிதம் கொண்ட சிவாக்
    கவிஞனே இன்னும் இங்கே
மெச்சநற் கவிதை தாரும்
    மீதுளம் வந்த நல்லீர்
இச்சதம் யேசு வாழ்வை
    இயல்பிடும் குருவோர் மற்றும்

பச்சிளம் சிறுவ ரோடு
    பல்லிலாத் தாத்தா கூடி
பிச்சுமே வாங்கும் குளிரை
    பெரிதுமே பாரா திங்கே
மொய்த் ததம் மாதரோடு
    முத்திடும் மாந்த ராரே
பிய்த்துமே இதயத் தன்பு
    பீறிட வணக்கம் செய்தேன்.

அச்சமே இல்லான்  செய்ய
    அரும்படை வீரன் புலியாய்

துச்சமாய் உயிரைத் தூவித்
    தூரிகை செய்த தும்பன்
பச்சையாய் வீரம் காட்டி
    பாதமண் படையை வெற்றி
உச்சியில் வைத்தான் அன்றோ
    இவனலோ வீர மைந்தன்!

ஈழத்துப் போரில் வேங்கை
    இயம்பிய சரித்தி ரங்கள்
ஆழத்தில் எழுதிப் போந்த
    அழகிலே தும்பன் காதை
ஞாலமும் விண்மீன் வாழும்
    ஞாயிறும் உயிரே காட்டும்
காலமெல் லாமும் வாழும்
    காலத்தை வென்று வாழும்!

வசந்தமே இல்லா வேங்கை
வாலிபக் கூட்டம் போரின்
நிசந்தனை நிகழ்வாய் கொண்டு
நிலத்திலே விடியல் காட்டும்
புசந்தனை மண்ணுக் காக்கும்
புத்துயிர்க் கொடையில் உள்ளம்
கசந்ததே இல்லை தேசக்
கடவுளர் இவரே அன்றோ!

கடலிலும் வாழ்வான் புலியே
காற்றிலும் எகிர்வான் புலியே
உடலிலே கந்த கத்தை
உட்கொண்டு நடை பயின்று
படையிலே கரும் புலியாய்க்
காட்டுவான் புலியே மண்ணின்
மடையிலே தும்பன் அந்த
மறவனாய் ஆனான் காணீர்!

யேசுவே காவிய த்தை
இயலவே கண்ண தாசன்
ஆசுவேர்ப் பதிய மாக்கி
ஆக்கிய கவிதை போலே
யேசுவாய் உயிரைப் பெற்ற
நிலத்திடை ஏகினானை
பேசுவாய் மனமே தும்பன்
யேசுவின் பிள்ளை அன்றோ!

நிலத்திடை மறந்தோம் பெற்ற
நீர்நிலை மறந்தோம் உற்ற
குலத்துயர் மறந்தோம் வேரின்
கொடி யினை மறந்தோம்
ஜலக்கடல் மீது ஏறி
ஜாலியாய் வந்தோம் தும்பன்
நிலத்திடை நின்ற தாலே
நிலமகன் அவனே அன்றோ!

புலிகளாய்ப் பிறந்த மாந்தர்
பெட்புயர் சரிதம் கோடி
கலியினைக் கடந்து வாழும்
களத்தினில் நிசமே காட்டும்
வலிமையீன் பாடம் வைத்த
வரலாற்றுத் தமிழில் ஈழப்
புலிகளின் காதை ஒன்றே
புத்தகம் ஆகும் அம்மா!

நன்றிகள் செய்தேன் தும்பன்
நற்றமிழ் யேசு பாடும்
மன்றிலே குடும்பத் தோனாய்
மகத்துவம் செய்தார் தம்மின்
அன்பிலே அவனின் பத்தாம்
ஆண்டிலே நினைவு ஆற்றும்
குன்றிலே என்னை வைத்த
கொள்கையீர் வணக்கம் வாழ்க!

## 51-வேவியூப் பிள்ளையாரே

வேவியூப் பிள்ளையாரே விநாயகனே நானழைத்தேன்
சேவடியில் மலர்குவித்துச் சிந்துதமிழ் நானெடுத்தேன்
-வேவியூ

பாவடிக்கும் சிற்பி எந்தன் பண்ணிசைக்குள் நீவிழுந்தால்
காவடிகள் தூக்கிநிற்கும் கனகமணித் தேசம் செய்வென்
-வேவியூ

மாவடியில் உனைப்பார்த்தேன் மருதடியில் தேரிழுத்தேன்
மாமாங்க நீராட்டில் மனங்குளிரத் தீர்த்தமிட்டேன்
பூமலரும் பாதமலர்ப் பொன்கரத்து அங்குசத்தில்
சேவடிகள் பூத்துநிற்க தேசமெங்கும் கோவில்கண்டேன்
-வேவியூ

எண்ணத்தில் வீடமைத்தேன் என்னிதயத் தீபமிட்டேன்
பொன்மகளை நீகொடுக்கப் புதுமழலை முத்தெடுத்தேன்

கண்ணிமைக்குள் நீயுறங்கும் கனகமணித் திருநாட்டில்
இன்னல் கவிகையிலே இங்குனைநான் கண்டேனையா!
-வேவியூ

நீகொடுத்த தேசமண்ணில் நெருப்பழித்து நிற்குதையா
மானெடுத்த கண்விழியாள் மண்காக்கப் போனதையா
தேனெடுத்த மலர்களெல்லாம் துப்பாக்கி ஆனதையா
நானெடுத்த என்கரத்தில் நீவிழுந்தால் தேசமையா!
-வேவியூ

## 52-தமிழ்த் திருமண வாழ்த்து

வானுயர் குறளே கொண்டு
வைகறை உதயத் தாகி
மானுயர் விடியல் பேசும்
மன்றுளே தமி ழீழத்தின்
தேனுயர் இறைமை பெட்புத்
தேன்தமிழ் வாகை அன்பு
தானுயர் கொண்ட இற்றைத்
தமிழ் மணம் வாழ்த்துவோமே!

ஆதியின் தலைமை தன்னில்
அன்புகொண் டறிவோர் வாழ்த்த
மேதினிக் குறள்நூல் செப்பும்
மிகையறம் மணநாள் ஏற்று
மாதினி நல்லாள் இந்து
மதியினை வதுவை செய்யும்
போதினைப் பெற்ற இராசேந்
திரன்எனும் செல்வ வாழி!

தமிழிலே திருமணத் தேன்
தமிழிலே அறத்தின் வாழ்த்து
தமிழிலே அன்பு மாற்றம்
தமிழிலே பனுவல் பண்ணும்
தமிழிலே வேத மாக்கித்
தமிழிடும் இளைய நல்லோர்
தமிழ்தரும் தாலி காணும்
தமிழையே வாழ்த்துவோமே!

தமிழிடத் தாலி கண்டீர்
தண்டமிழ் ஒலிக்கக் கைகள்
அமிழ்திட நெஞ்ச மாக்கி
ஆலயம் கண்டீர் எங்கள்

கமழ்தமிழ் நாட்டின் வேந்தன்
காணுமோர் புனிதம் ஏற்றித்
தமிழ்மணம் வைத்த பெட்பீர்
தமிழ்கொண்டு வாழி வாழி!

மறம்கொடைத் தமிழர் ஈழம்
மன்றிலே உதிக்கும் காலை
அறம்பொருள் இன்பம் வீடு
அருமறை காட்டும் வண்ணம்
திறம்பட உரைத்துக் கோர்த்த
திருமணத் தமிழர் வாழ்வை
நறும்மலர் போலே இந்த
நவயுகம் கண்டீர் வாழ்க!

அங்கைகள் தழுவப் பாகம்
அடைக்க லமாக மங்கை
இந்துவைத் தமிழில் ஏற்கும்
இராசனே குறளே காணும்
சிந்துதேன் மழலை ஆர்க்கச்
செல்வமும் சிறப்பும் வாழ்வும்
வந்துதேன் இல்லம் சூழ
வாழி பல்லூழி வாழி!

(கலாநிதி ஆதிகணபதி தலைமையில் நடந்த நக்கீரன் மகனார் இராசேந்திரன்-இந்து தமிழ்த்திருமணத்தில் வாழ்த்திய மணமங்கல வாழ்த்துப்பாக்கள்)

## 53-மகத்துவமும் மாமனிதமும்

என்னையென் தாயார் கையில்
இருந்தவிழ் உண்ட போதும்

கன்னலாய்ப் பாலைப் பருகிக்
கனிமடி துயின்ற போதும்
சென்னியில் மின்னல் ஆகிச்
சிரசேறி என்னைச் சேர்ந்த
அன்னையே, தமிழே இந்த
அவைதந்த அமுதே வாழி !

தவமெனும் குமாரின் மன்றம்
தந்த பேர் தலைவ ரேறே
சுவையிலே குமாரைக் காட்டும்
சுந்தரக் கவிஞர் ஆறே
குவலயம் முழுதும் எங்கள்
குமாருக்கு நினைவு காணும்
அவையிலே கனடா மன்ற
அறிஞரே வாழ்த்துச் செய்தேன்!

வள்ளலைப் பாடு என்றால்
வளமிடும் மனிதர் வருவார்
உள்ளதைப் பாடு என்றால்
உயர்விடும் கவிஞர் வருவார்
முள்ளதைப் பாடு என்றால்
முகம்மாறும் மனிதர் வருவார்
கொள்ளிடம் எதுவோ அங்கே
கொள்வது எந்தன் பணியே !

புனிதத்தைப் பாடு என்றால்
பெரியவர் பக்தி காண்பேன்
கனியதைப் பாடும் என்றால்
கல்வியில் கனிவர் காண்பேன்
நனியதைப் பாடும் என்றால்
நல்லவர் இதயம் காண்பேன்
குனிவதைப் பாடும் என்றால்
கூட்டமாய் எத்தர் காண்பேன் !

மாமகள் தன்னைப் பாட
மண் நிற்பாள் பூபதித்தாய்
மாமுகில் தன்னை என்றால்
மழையாகக் கல்வி நிற்கும்
பாமுனி தன்னைக் கேட்டால்
பாரதி பாட்டுக் கேட்கும்
மாமனி தன்னே என்றீர்
மகத்துவக் குமாரே வந்தான்!

புலியென்று முகத்தைச் செய்வார்
பெருமைகள் பேசிப் பின்னால்
எலிவந்தால் வாலைக் காட்டும்
இழிமாந்தர் பலரைக் கண்டேன்
சிலருண்டு கதிர்காமர் வாழ்
சேரிடம் கொழும்பு தன்னில்
புலிஎன்றால் புலியே என்ற
புத்தகம் குமாரைக் கண்டேன் !

பொங்குமா கொழும்பு தன்னில்
புலியெனக் கணக்குப் போட்டு
சங்கம்வந் துரக்கக் கூவி
சனபதி சொன்ன பின்னும்
எங்கும்நான் புலியே என்றே
இயற்றிய மனிதம் கண்டேன்
சிங்கத்தின் கொடிய மன்றில்
சீறிய புலியைக் கண்டேன் !

பஞ்சைகள் பராரி இன்னும்
பணியிடம் காண்போர் தன்னை
நஞ்சுபோல் சிறையில் வைத்து
நசுக்கிய கொடுமை கண்டு
வெஞ்சினம் கொண்டு அந்த
வேளையில் தமிழர் துணையாய்
அஞ்சிடா நெஞ்சுன் நின்றான்
அவனன்றோ மா மனிதன் !

ஆங்கிலப் பேச்சில் குமாரின்
அறிவினைக் கண்டு பின்னர்
ஆங்கில அறிஞர் பல்லோர்

அடுத்ததாய் பேச வந்தோர்
ஈங்குநாம் வெட்கம் கொண்டோம்
எங்களின் பேச்சும் பேச்சோ
வீங்குவார் மொழியின் வீச்சில்
விழுமியம் குமாரே என்றார் !

மம்என்றும் டாடி என்றும்
மகிழ்விடக் கனடா நாட்டில்
டம்மிகள் பலதைச் செய்து
டாம்பீகம் காட்டும் எங்கள்
அம்மியும் ஓகே... யேசாய்
அரைத்திடும் மனிதர் நாங்கள்
தம்தந்தை அப்பு என்ற
தகையன்றோ குமாரின் பண்பு!

கிரிசாந்தி கொலைஞர்க் கெதிராய்
கிஞ்சித்தும் சதமே இன்றி
புரிவாதம் தன்னைக் கொழும்பில்
புரிந்திட்டார் வென்றார் அந்த
அரிவாளின் கொடியர் கூண்டில்
அடைபட உலகம் பார்க்க
செறிநாவில் தர்க்கம் செய்தார்
சிரசிது மனிதம் என்பேன் !

தேங்கிய கொடுமை தன்னை
திறனாய்வு உரையே செய்து
தூங்கிய வெள்ளை நாட்டைத்
துளையிடத் துயரம் சொன்னார்
மாங்குயில் நிலத்தின் மன்றில்
மறவரின் புலிகள் இன்றேல்
தாங்கிடும் தமிழர் தலையில்
சம்பலே அரைப்பார் என்றார் !

பயங்கர வாதி என்றும்
பார்புலி என்று ரைத்தும்
மயங்கி வரப் பிரச்சாரம்
மார டித்தால் லாபமென்று
சுயங்கள் இழந்து தமிழ்ச்
சொந்தம் இழந்து பலர்
புயங்கள் உயர்த்தி வரப்
பெரும் பணங்கள் தேடுகிறார்

விளம்பரதிற் காக வென்று
விலாவந்து புலியே என்பார்
உளம் எலிக் கூட்டத்தோடே
உருமாறி மறைவாய் நிற்பார்
தளமெங்கே முகமும் அங்கே
தக்கதாய் மாற்றம் செய்து
புலம் இங்கே மாறிமாறிப்
பொருள்பாடி நிதி சேர்க்கின்றார்

இவர்களெல் லோரும் விட்டு
இதுவொன்றே உண்மை என்று
புவிவிட்டு புவிகள் சேர்ந்தும்
புலிநானே என்று ரைத்த
பவிசாளன் குமாரை எண்ணிப்
பண்பாடும் இந்த மன்றம்
அவைசார ஏற்றல் கண்டேன்
அவர்க்கென்றும் சரிதம் உண்டு!

ஆட்டத்தில் சந்திரிக் கா
அரங்கிலே பொறிகள் வைத்த
கூட்டத்தால் குமார் இறந்தான்
கொன்றவன் சாந்தா என்பான்
நாட்டத்தால் பதவிக் காக
நாய(ா)கி இன சங்காரத்
தோட்டியான் உண்மை கூறும்
தேதியில் சுடப் பட்டானே !

மாமனிதன் குமாரே என்று
மகுடமிட் டணிகள் செய்தும்
மாமனிதன் என்றே உலக
மன்றிலே போற்றல் செய்தும்

மாமனிதன் என்றே விதந்து
மறையெனப் புகழை வைத்தும்
மாமனிதன் குமாரே என்றார்
வாழ்த்தினார் பிரபா வாழ்க!
(கனடாவின் மாமனிதர் மன்றம் நடத்திய குமார் பொன்னம்பலத்தின் அறுபத்தி ஐந்தாவது பிறந்த நாளில் மகத்துவமும் மாமனிதனும் என்ற தலைப்பில் கவியரங்கக் கவிதை இது-2003)

## 54-என்னை எனக்கறிவித்த என்தமிழ்க் கலாதீபமே போற்றி!

கலங்கரை விளக்கே ஆகக்
கல்வியின் ஒளியே யாகக்
இலங்கிடும் விழியே யாக
இயலிசை இலக்க மாக
துலங்கிடும் அறிவே ஆக
திருவிடும் திருவே யாக
நலன்தரும் கலா தீப
நாயகி போற்றி! போற்றி!

உன்னையா னோதும் தோறும்
என்னையார் புகழின் போதும்
சென்னியில் அறிஞர் கேண்மைச்
சேவையில் உந்தன் மைந்தர்
மின்னுவர் காணும் தோறும்
மீக்குயர் கல்விக் கோட்ட
அன்னையே உன்னை எண்ணி
அடிபணிந் திடுவேன் தாயே!

பார்மிசை மைந்தர் வந்தார்
பண்பிசை தந்தார் எங்கள்
ஊர்மிசை யுந்தன் பாதம்
ஒவ்வொரு நாளும் காணும்
தேர்மிசை கல்வி கண்ட
திருவிலூர் மாந்தர் வந்தார்
சேர்விலும் தாயே உந்தன்
திருவிழாக் காணுகின் றோம்!

ஐம்பதுன் அகவை தன்னில்
அம்மநின் பாதம் தொட்டு
கும்பிடும் தோறும் எந்தன்
குருதியின் ஓட்டம் விஞ்சி
அம்பிடப் பாயு துள்ளம்
அணிகல விளக்காய் ஊரார்
நம்பிடும் தாயே எந்தன்
நாளெலாம் நீயே வராய்!

தீவகத் தாயே உன்னைத்
திருவுலா மாட மாக்கிக்
காவகம் செய்தோர் கூடம்
காத்தவர் கல்வி தந்தோர்
சேவகம் செய்தோர் உந்தன்
திருவிழாக் கலா தீபம்
பாவகம் தந்தோ ரென்றுன்
பதியுளார் பரவ நின்றோம்!

வேலணை மத்திய மகா
வித்தியா அணங்கே உந்தன்
கோலமா யார்க்கும் அகவை
குன்றத்தில் ஐம்ப தாகக்
சீலமா யெழுச்சி மக்கள்
சிந்துர விழாவுஞ் சேர
தூலமா யுறையுந் தீவுத்
தேவியுன் கொற்றம் வாழி!

வாழிநீ கலாப தீபம்
வாழிநீ கல்வித் தூபம்
வாழிநீ அறிவுக் கோட்டம்
வாழிநீ தமிழின் ஊற்றம்
வாழிநீ அகவை ஐம்பத்
தாகிய போதில் தாயே
வாழிநீ வாழி எங்கள்
வைகறைக் கதிரே வாழி!

55-

## வாழ்க கீதவாணி!

என்னரும் கவியின் தலைவ
இயலிசைத் தமிழின் புலவீர்
மன்னரும் வசமே யாக
மணிநிலம் பரிசே ஏத்தும்
கன்னரும் இசையை வானக்
கருவியால் வீடு சேர்க்கும்
இன்னரும் கீத வாணி
இயக்கமே வணக்கம் செய்தேன்!

கானத்தை மணியை வீணைக்
கன்னலை அமுதைத் தேனை
ஞானத்தை அறிவுத் ????
நல்கிடக் காட்டும் தமிழை
மானத்தை நிலமும் உயிரும்
மன்றிடும் வேரை நீரை
தானத்தை தமிழாய்ச் சொரியும்
தாயன்றோ கீத வாணி!

வானலை தன்னில் சின்ன
வைகறைக் காற்றாய் வந்து
கானலை தன்னில் இன்றோர்
காரிருள் தன்னும் கேட்கும்
தேனலை ஆகக் கண்ட
தீந்தமிழ்க் கீத வாணி
தானதைப் புதிதாய் வையம்
தந்ததோர் ஆண்டே வாழ்க!

புதியதோர் ஆண்டு கீத
வாணியின் புதிய ஆண்டு
பதியத்தை மண்ணில் வைத்து
பாதையை வையமெங்கும்
விதியது புதிதாய்க் கண்ட
விதந்தரு ஆண்டு என்றால்
வதிகின்ற நாடு எங்கும்
வரலாறே வாழ்க! வாழ்க!!

சித்திரை வசந்தம் இன்று
சிரிக்கின்ற தேசம் மாறி
நித்திரை இன்றித் தீயர்
நிலத்திடை எரிக்கும் நாட்கள்
எத்தனை கொடுமை தமிழர்
இடுகாடாய் நாடு எங்கும்
வைத்ததோர் பயங்கரத் தில்
வருவதும் புதிய ஆண்டோ?

கன்றுகள் துள்ளித் திரியும்
கரிச்சான்கள் நெல்லிற் சாயும்
இன்றொரு வசந்தம் உண்டேல்
இலையெலாம் தளிர்கள் காட்டும்
மன்பதை சிரிக்கும் கோவில்
மணியெலாம் சிலிர்க்கும் காட்சி
ஒன்றுமே இல்லா தெங்கள்
ஊரெலாம் புதைகள் அன்றோ?

செம்மணி என்றார் தோண்டிச்
செகமெலாம் காட்டா தந்த
அம்மணித் துரோக ஆட்சி
அம்மணம் காட்டும் வேளை
எம்மணித் தமிழர் சடலம்
இட்டதோர் புதையின் குழியை
இம்மணி யாழின் அரங்கில்
எடுக்கின்றார் அங்கே பாரீர்!!

சித்திரைப் புதிய ஆண்டில்
சிரித்திடக் கவலை மாறி
முத்திரைத் தமிழர் வாழ்வின்
முத்தமிழ் வாழ்த்தும் காலை
எத்தனை கொடுமை பாரீர்

இனவெறி அரக்கம் வைத்த
அத்தனை புதைகா டெங்கும்
அகழ்வுகள் பிணமாய் கண்டோம்!

சித்திரைத் திருநாள் தன்னில்
சீர்தரக் கீத வாணி
புத்தெழில் சிறக்கும் நாளில்
புவியெலாம் அழகு பொங்க
முத்தமிழ்க் கலைகள் பொங்க
முகிழ்க்கின்ற காலையார
பெற்றமண் துயரம் நீங்கிப்
பிறந்திட வாழ்த்தே செய்வோம்!

வானலை தன்னில் கீத
வாணியே வருவாய் அம்மா!
தேனலை களமே கொண்டு
தேசிடும் உரமே தாராய்
நானலை கொண்டு இந்த
நாளிலே கவிதை தந்தேன்
நேயரே அனைவர் யார்க்கும்
நெஞ்சிடும் வாழ்த்துச் செய்தேன்.!

(கீதவாணி வானொலியில் அதன் புதிய ஆண்டு சிறப்புப் பெற்ற ஒரு சித்திரைக் கவிதை இது)

## 56-மகத்துவமும் மாமனிதனும்.......

என்னையென் தாயார் கையில்
இருந்தவிழ் உண்ட போதும்
கன்னலாய்ப் பாலைப் பருகிக்
கனிமடி துயின்ற போதும்
சென்னியில் மின்னல் ஆகிச்
சிரசேறி என்னைச் சேர்ந்த
அன்னையே, தமிழே இந்த
அவைதந்த அழகே வாழி !

தவமெனும் குமாரின் மன்றம்
தந்த பேர் தலைவ ரேறே
சுவையிலே குமாரைக் காட்டும்
சுந்தரக் கவிஞர் ஆறே
குவலயம் முழுதும் எங்கள்
குமாருக்கு நினைவு காணும்
அவையிலே கனடா மன்றின்
அகத்துளீர் வாழ்த்துச் செய்தேன்!

வள்ளலைப் பாடு என்றால்
வளமிடும் மனிதர் வருவார்
உள்ளதைப் பாடு என்றால்
உயர்விடும் கவிஞர் வருவார்
முன்னதைப் பாடு என்றால்
முகம்மாற்றி மனிதர் வருவார்
கொள்ளிடம் எதுவோ அங்கே
கொள்வது எந்தன் பணியே !

புனிதத்தைப் பாடு என்றால்
பெரியவர் பக்தி காண்பேன்
கனியதைப் பாடும் என்றால்
கல்வியில் கனிவர் காண்பேன்
நனியதைப் பாடும் என்றால்
நல்லவர் இதயம் காண்பேன்
குனிவதைப் பாடும் என்றால்
குலமது எத்தர் காண்பேன் !

மாமகள் தன்னைப் பாட
மண் நிற்பாள் பூபதித்தாய்
மாமுகில் தன்னை என்றால்
மழையாகக் கல்வி நிற்கும்
பாமுனி தன்னைக் கேட்டால்
பாரதி பாட்டுக் கேட்கும்
மாமனி தன்னே என்றீர்
மகத்துவக் குமாரே வந்தான்!

புலியென்று முகத்தைச் செய்வார்

பெருமைகள் பேசிப் பின்னால்
எலிவந்தால் வாலைக் காட்டும்
இழிமாந்தர் பலரைக் கண்டேன்
சிலருண்டு கதிர்காமர் போல்
செறிவுளார் கொழும்பு தன்னில்
புலிஎன்றால் புலியே என்ற
புத்தகம் குமாரைக் கண்டேன் !

பொங்குமா கொழும்பு தன்னில்
புலியெனக் கணக்குப் போட்டு
சங்கம்வந் துரக்கக் கூவி
சந்தக்கா சொன்ன பின்னும்
எங்கும்நான் புலியே என்றே
இயற்றிய மனிதம் கண்டேன்
சிங்கத்தின் பக்கம் பார்த்துச்
சீறிடும் புலியைக் கண்டேன் !

பஞ்சைகள் பராரி இன்னும்
பணியிடம் காண்போர் தன்னை
நஞ்சுபோல் சிறையில் வைத்து
நசுக்கிய கொடுமை கண்டு
வெஞ்சினம் கொண்டு அந்த
வேளையில் தமிழர் துணையாய்
அஞ்சிடா நெஞ்சுன் நின்றான்
அவனன்றோ மா மனிதன் !

ஆங்கிலப் பேச்சில் குமாரின்
அறிவினைக் கண்டு பின்னர்
ஆங்கில அறிஞர் பல்லோர்
அடுத்ததாய் பேச வந்தோர்
ஈங்குநாம் வெட்கம் கொண்டோம்
எங்களின் பேச்சும் பேச்சோ
வீங்குவார் மொழியின் வீச்சில்
விழுமியம் குமாரே என்றார் !

மம்என்றும் டாடி என்றும்
மகிழ்விடக் கனடா நாட்டில்
டம்மிகள் பலதைச் செய்து
டாம்பீகம் காட்டும் எங்கள்
அம்மியும் ஓகே... யேசாய்
அரைத்திடும் மனிதர் பார்க்க
தம்தந்தை அப்பு என்ற
தகையன்றோ குமாரின் பண்பு!

கிரிசாந்தி கொலைஞர்க் கெதிராய்
கிஞ்சித்தும் சதமே இன்றி
புரிவாதம் தன்னைக் கொழும்பில்
புரிந்திட்டார் வென்றார் அந்த
அரிவாளின் கொடியர் கூண்டில்
அடைத்துமே உலகம் பார்க்க
செறிநாவில் தர்க்கம் செய்தார்
சிரசிது மனிதம் என்பேன் !

தேங்கிய கொடுமை தன்னை
திறனாய்வு உரையே செய்து
தூங்கிய வெள்ளை நாட்டைத்
துளையிடத் துயரம் சொன்னார்
மாங்குயில் நிலத்தின் மன்றில்
மறவரின் புலிகள் இன்றேல்
தாங்கிடும் தமிழர் தலையில்
சம்பலே அரைப்பார் என்றார் !

பயங்கர வாதி என்றும்
பார்புலிபார் எனற வரும்
மயங்கி விழப் பிரச்சாரம்
மார டித்தால் லாபமென்று
சுயங்கள் இழந்து தமிழ்ச்
சொந்தம் இழந்து பலர்
புயங்கள் உயர்த்தி வரப்
பெரு லாபம் தேடுகிறார்

விளம்பரதிற் காக வென்று
விலாவந்து புலியே என்பார்

உளம்பின்பு எலியின் உள்ளே
    உருமாறி மறைவாய் நிற்பார்
தளமெங்கே முகமும் அங்கே
    தக்கதாய் மாற்றம் செய்து
புலம் இங்கே மாறிமாறிப்
   புகுந்து விளையா டுகின்றார் !

இவர்களெல் லோரும் விட்டு
    இதுவொன்றே உண்மை என்று
புவிவிட்டு புவிகள் சேர்ந்தும்
    புலிநானே என்று ரைத்த
பவிசாளன் குமாரை எண்ணிப்
    பண்பாடும் இனிய மன்றம்
அவைசார ஏற்றல் கண்டேன்
    அகிலமிடும் சரிதம் உண்டு!

ஆட்டத்தில் குமாரின் எதிரி
    அரங்கிலே பொறிகள் வைத்த
கூட்டத்தால் குமார் இறந்தான்
    கொன்றவன் சாந்தா என்பான்
நாட்டத்தால் பதவிக் காக
    நாய(ா)கி இன சங்காரத்
தோட்டியான் உண்மை கூறும்
    தேதியில் சுடப் பட்டானே !

மாமனிதன் குமாரே என்று
    மகுடமிட் டணிகள் செய்தும்
மாமனிதன் என்றே உலக
    மன்றிலே மறைகள் வைத்தும்
மாமனிதன் என்றே போற்றி
    மண்ணிலே சுவடு நெய்தும்
மாமனிதன் என்றார் பிரபா
    மகத்துவம் இதுதான் அன்றோ !உ௭

(மகத்துவமும் மாமனிதமும் என்ற தலைப்பில்
குமார் பொன்னம்பலம் அவர்களின் அறுபத்தி ஐந்தாவது பிறந்த தின விழாவில் பாடிய கவிதை இது)

.